ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	சித்ரபாநு ஹூ ஐப்பசி - கார்த்திகைமீ	ஸஞ்சிகை 11

"ஸுகாஸநே தாரகமௌக்திகேந்த்ரே
க்ருபாவஶாத்ஸ்வீக்ருதஸஞ்சியா நஃ |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1942
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா |
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தலோகாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

2/6/07

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

பாசுரங்களின் பகுதி

அமலனுதிபிரான்

[வித்வாங் ஸ்ரீ உப. ஏ. வி. கோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.]

[ஸஞ்சிகை 10 : பக்கம் - 338 தொடர்ச்சி]

10. ஆல மாமரத் தின்னிலை மேலொரு பாலகனாய்
ஞால மேழுமுண் டானரங் கத்தர வின்னணையான்
கோல மாமணி யார முமுத்துத் தாம முமுடிவில்லதோர்எழில்
நீல மேனியை யோநிறை கொண்டதென் னெஞ்சினையே.

ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்—(1) திருவடி முதல் திருமுகம் வரையில் [ஆபாதசூடம்.] அவயவங்களை அநுபவித்து, அரங்கத்தமலன் முகத்துத் திருக்கண்களின் குளிர்ந்த கடாக்ஷங்களைப் பெற்று அநுபவித்தார். 'அமலன்' என்று த்யாநத்தைத் தொடங்கினர். அமலனாகவே ஸுமுகமாய்க் குளிரக் கடாக்ஷிக்கப் பெற்றார். அமலனென்று தொடங்கிய த்யாநத்திற்கு அமலன் முகத்துக் கடாக்ஷம் ஃபலம். தத் க்ரது ந்யாயம்; யதோபாஸநம் ப்ராப்தி. அவயவ வர்ணநப் பாசுரங்களில் உபக்ரமப்படியே உபஸம்ஹாரம். அமலனென்று துடங்கி அமலனென்று அவயவ வர்ணநையின் ஸமாப்தி. (2) 'காரணம் து த்யேய:' என்றபடி, காரணமாக அரங்க ப்ரஹ்மத்தை த்யாநம் செய்கையில், காரணத்வத்தை விஸ்தாரமாக விளக்கும் சாந்தோக்ய ஸத்வித்யையில் கூறிய ஆலமாமர த்ருஷ்டாந்தத்தை 'ஆலமா மரத்தின்' என்பதால் வ்யஞ்ஜநம் செய்கிறார். 'ந்யக்ரோதபலமத ஆஹரேதி'. 'இதோ இங்கே ஆலமாமரம் நிற்கிறதே! ஆலம்பழ மொன்று எடுத்துவா' என்றார் தகப்பனார் மகன் ஶ்வேதகேதுவைப் பார்த்து. அவன் கொணர்ந்ததும் அதை உடைத்து ஒரு விதையை யெடுக்கச்செய்து, அதனைக் கிழிப்பித்து, 'உள்ளே என்ன இருக்கிறது?' என்று கேட்டார். 'ஒன்றையும் காணேன்' என்றான் மகன். 'இந்த நுண்ணிய விதையிலிருந்து இவ்வாலமாமரம் விரிந்தது. இதுபோல ஸத் என்னும் ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மமான அணிமையிலிருந்து புவநம் விரிந்தது; அதிலேயே நிற்கிறது; அதிலேயே மறுபடியும் லயிக்கிறது' என்று தகப்பன் மகனுக்கு விளக்கினார். ஒன்றுமில்லை யென்று சொல்லாம்படி நுண்ணிய ப்ரஹ்மத்தினிடமிருந்து புவநப் பரப்பெல்லாம் விரிந்து, முடிவில் அதனுள்ளே லயித்துக் கிடக்கிறதென்று காட்டும் ஆலமாமர த்ருஷ்டாந்தத்தின் வ்யஞ்ஜநத்தால் வடதள சிசு லீலைக்காட்சி என்ன அதிசயமென்று கைமுத்ய வ்யஞ்ஜநத்தில்

கருத்து. ‘ஒரு பாலகன் அளவான உருத்தான் வேணுமோ?’ என்று வ்யஞ்ஜநம். (3) ஆலமாமரத்தின்—பெரிய மரத்தின்பேரில் சயனிக்கலாகாதா? அதையும் ப்ரளயம் செய்து ஓர் சிற்றிலையின் பேரில்தான் சயனிக்கவேணுமோ? அவடித வடநக் காட்சி ஸேவையில் நோக்கு. குழந்தைக் கேற்ற விளையாட்டில் கருத்து. ‘பள்ளியாலிலை ஏழுலகும் கொள்ளும்’, ‘பாலனா யேழுலகு முண்டு பரிவின்றி ஆலிலை யன்ன வசஞ் செய்யு மண்ணலார்’, ‘அடியார்ந்த வையக முண்டு ஆலினிலைத் துயின்ற வாழியான்’. (4) மார்க்கண்டேயன் கரியே. சிரஜீவியாயிருந்து ப்ரளயத்தில் திருவடிகளை ஶிரஸால் க்ரஹித்து, ‘அன்று ப்ரளயத்தில் நான் நமஸ்கரித்தவரே இக்கண்ணன்’ என்று பாண்டவர்களிடம் ஸாக்ஷ்யத்தை அறுதியிட்டார். ‘𑌸𑍋𑌽𑌯𑌂 𑌦𑍇𑌵𑌃’ என்று ப்ரத்யபிஜ்ஞா ஸாக்ஷ்யம். ஒன்றுந் தேவில், ‘புக்கடிமையினால் தன்னைக் கண்ட மார்க்கண்டேய னவனை நக்கபிரானும் அன்றுய்யக்கொண்டது நாராயணனருளே’ என்பதை நினைப்பூட்டுகிறது. (5) ‘ஆதி’ என்று தொடக்கத்தில் ப்ரளய காரணத்வத்தை ஸூத்ரம்போல ஸூசித்ததை இங்கே விளக்குகிறார். (6) ஸ்ரீபாகவதத்தின் கடைசி ஸ்கந்தத்தில் மூன்று அத்யாயங்களால் மார்க்கண்டேயர் ப்ரளயத்தில் பகவானுடைய பரத்வத்தை ஸாக்ஷாத் த்ரஷ்டாவாகக் கண்டு ஸாக்ஷி சொல்லுவது விஸ்தரித்துளது. இப்ரபந்தமும் ஓர் ஸம்க்ஷேப பாகவதம். ‘𑌵𑌟𑌪𑌤𑍍𑌰𑌪𑍁𑌟𑍇 𑌤𑍋𑌕𑌂 𑌶𑌯𑌾𑌨𑌂 𑌤𑍍𑌵𑍇𑌕𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍’ என்று மார்க்கண்டேயர் நேரில் கண்ட ப்ரளயக் காட்சியைச் சொல்லிப் பாகவதம் முடிவுபெற்றது. பகவதவதாரரான நர நாராயணர் இருவரும் மார்க்கண்டேயருக்கு ஸேவைஸாதித்து, அவருக்குத் தத்வோபதேசம் செய்தார்கள். அர்ஜுநன் ப்ரார்த்தித்து விஶ்வரூபக் காட்சி பெற்றான். அது ப்ரளயக் காட்சியல்ல. ஸ்திதியில் விஶ்வரூபக் காட்சி. ப்ரளயத்தில் விஶ்வம் அரூபமாய் அஸத்வ்யபதேசார்ஹமாய் பகவானுக்குள் ஒன்றியிருக்கும். மார்க்கண்டேயர் ப்ரளயக் காட்சியை விரும்பிப் பெற்று ஸேவித்தார். ‘𑌶𑌯𑌾𑌨𑌂 𑌪𑌰𑍍𑌣𑌪𑍁𑌟𑌕𑍇 𑌗𑍍𑌰𑌸𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌭𑌯𑌾 𑌤𑌮𑌃 । 𑌮𑌹𑌾𑌮𑌰𑌕𑌤𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑌦𑌨𑌪𑌙𑍍𑌕𑌜𑌮𑍍 । 𑌪𑌦𑍍𑌮𑌗𑌰𑍍𑌭𑌾𑌰𑍁𑌣𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌂 𑌹𑍃𑌦𑍍𑌯𑌹𑌾𑌸𑌾𑌵𑌲𑍋𑌕𑌨𑌮𑍍’ என்று சுகர் வர்ணித்த மார்க்கண்டேயாநுபவம் இவ்வாழ்வார் நெஞ்சில் ஓடுகிறது. ‘𑌮𑌹𑌾𑌮𑌰𑌕𑌤𑌶𑍍𑌯𑌾𑌮𑌮𑍍’ என்று சுகர் வர்ணித்ததை ‘முடிவில்லதோரெழில் நீலமேனி ஐயோ’ என்கிறார். மார்க்கண்டேயர் நெஞ்சினை நிறை கொண்ட நீலமேனி, என் நெஞ்சினை நிறைகொண்டதென்கிறார். ப்ரளயாவஸரத்தில் சிதசித் புவநமான சரீரம் இல்லாததுபோல லயித்துக் கிடக்கிறது. பகவானுடைய திவ்யமங்கள நீலமேனியான சரீரம் மட்டும் ஸேவை. மற்றொன்றின் காட்சியே யில்லை. திவ்ய மங்கள விக்ரஹாம்ருதத்தோடுகூடிய அமுதொன்றே காணும் அவஸரம். ஸம்ஸார பந்தத்தின் ப்ரளயமான மோக்ஷம் இவ்வாழ்வாருக்கு ஸித்திக்கும் அவஸரமிது. ‘𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑌦𑌨𑌪𑌙𑍍𑌕𑌜𑌮𑍍 । 𑌪𑌦𑍍𑌮𑌗𑌰𑍍𑌭𑌾𑌰𑍁𑌣𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌂 𑌹𑍃𑌦𑍍𑌯𑌹𑌾𑌸𑌾𑌵𑌲𑍋

க்ஷணம்’ என்றபடி முன் பாசுரத்தில் திருமுகத்தையும் ஹ்ருத்ய கடாக்ஷங்களையும் அநுபவித்தார். ‘ஶ்ரீவக்ஷோராஜத்கௌஸ்துபஹாவஸம்கிதம் ஶ்ரேஷ்டம் வநாஸ்ரஜம் ஶ்யாமஸார ஸாமகம்’, ‘யதா பாலா ஜல்ஹத்யதீவ விபூஷித:’ ‘ஏகாகம் ச தஸ்யைவ ஜாயமாநஸ்யாபி தேந நிரீக்ஷிதோऽவாங்கம நிரீக்ஷணேந’ ‘ஈயதம் வாமகம் வீக்ஷ்ய நேத்ராப்யாம் பிஷிதம் ஹரிம்’ என்று சுக வர்ணந ஶ்லோகங்கள் இவ்விரண்டு பாசுரங்களிலும் ஆழ்வார் நெஞ்சில் ஓடுகின்றன. ‘பாலகனாய்’ என்று சுகர் ஶ்லோக ஸ்மாரணம். கோவலன் அவதார ஶ்லோகத்திற்கும் ஸ்மாரணம். (7) சிறு குழவிக் கேற்ப ஒருசிறு தளிர். ‘நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு ஏரா ரிளந்துளிர்மேல் துயி லெந்தாய்’.

ஞாலமேழும் உண்டு—(1) ‘அத்தா சராசரக்ரஹணாத்’ என்ற ஸூத்ரத்தை நினைக்கிறார். ஸம்ஹரிக்கப்படும் உலக முழுவதும் ஓதநம். சோறு என்று ஶ்ருதி ஸூத்ரங்கள் பேசுவதை அநுஸரிக்கிறார். இக் குழந்தைக்கு ஏழுலகும் செவ்வெண்ணெய் போலும். ஏழுலகமும் உண்ண இந்தச் சிசு வேஷம்தான் வேணுமோ? ஶயநத்திற்கு ஓர் ஆலந் தளிர்தான் வேணுமோ? அவன் ஆச்சர்ய ஸங்கல்பமான மாயையை யார் அறியவல்லார்?

அரங்கத்தரவி னணையான்—ஓரக்ஷரமான ப்ரணவத்திற்குள் விஶ்வமும் அடங்கியுள தென்பர். ப்ரணவ விமாநத்திற்குள், அரவணையில் பள்ளி கொண்டவனுக்குள், விஶ்வம் அடங்கியிருப்பதில் ஐயமில்லை என்பதை விளக்க வடபத்ர ஶயந சிசு வ்ருத்தாந்தத்தை யெடுத்தது.

கோலமாமணி ஆரமும் முத்துத் தாமமும்—நித்ய முக்த ரெல்லாருக்கும் திருமார்பு. இவ்வாழ்வாருக்குத் திருமார்பு நித்ய ஸ்தாநம். அவதார கார்யம் முடிகிறது. தம் ஸ்தாநமாகிய திருமார்பில் கண் போகிறது. மாமணி கௌஸ்துபம். ஜீவாபிமாநியான நித்யர். முத்துத் தாம மென்பது முக்தர்களின் கோவையை நினைப்பூட்டுகிறது. நித்ய முக்தர்கள் வாழும் திருமார்பின் அநுபவம். இந்த அவதார விக்ரஹத்தைவிட்டு முத்தி பெறும் அவஸரத்தில் இதன் பொருத்தம் ரஸிக்கத்தக்கது.

நீலமேனி ஐயோ நிறைகொண்டது என் நெஞ்சினையே—பெருமாள் திருமேனியிலேயே இவருக்கு நித்யவாஸம். திருமேனி இவரையும் இவர் நெஞ்சையும் உட்கொண்டு, இவரையும் இவர் நெஞ்சையும் ப்ருஹ்மணம் செய்கிறது. பெருமாளைப்போல அவர் திவ்ய மேனியும் ப்ரஹ்மம். ‘ஜ்ஞாத்ருத்வம் ப்ரஹ்ம தத்ராபி தஸ்ய விக்ரஹதாம் ஶிவம் யதாத்மந:’. பெருமாளுக்குள்ள லக்ஷணம் திருமேனிக்கு முண்டு. ‘பகவான் எப்படியோ, அப்படியே அவர் வ்யக்தியும்’. ப்ரஹ்மத் தன்மையும், ப்ரஹ்மணத் தன்மையும் அதற்கு முண்டு. முக்தராவாரை ப்ரஹ்மணம் செய்வது திருமேனியோடு கூடிய பகவான். ஞானதர்மத்தின் பூர்ண

விகாஸம் தான் ப்ருஹ்மணம். 'நிறைகொண்டது என் நெஞ்சினையே' என்று தர்மபூத ஜ்ஞாநத்தின் நிரதிசய விகாஸமான பூர்ணதை பெறுவதைப் பேசுகிறார் 'ஸூக்ஷ்ம ஸுவிஸ்தாரவ:'. 'முடிவில்லதோரெழில்'. 'அத்யர்க்காநலதீப்த்யாதேநஜ்யோதிரநூஹவஷ'. 'யத: ஸ்வரோசிஷா ஜ்யோதீம்ஷி தீப்யந்தே' 'த்ரிபாதஸ்யாம்ருதம் திவி' என்ற அநுபவங்கள் கிடைக்கின்றன. 'ஐயோ' என்பது 'ஹாவு ஹாவு ஹாவு' என்கிற முக்தர் ஸாமகாநத்தையும் ஸூசிக்கிறது. 'நிறைகொண்டது'—என் அடக்கத்தை யழித்ததென்றும், என் நெஞ்சைக் கொள்ளைகொண்டதென்றும்' பொருளுரை. என்னெஞ்சு நிறையப் புகுந்து தந்மயமாக்கிவிட்டது. நெஞ்சை அதன் வசமாக்கிவிட்டது. நிறை=நிறைவு. முன் பாசுரங்களில் அவயவங்களின் சோபையின் அநுபவம். இங்கே ஸமுதாய சோபையின் அநுபவம். அகண்டத் திருமேனியின் அநுபவம். 'வாஙாம்ஹோஜம் ஹ்ருதி' என்று ஸோபாநத்தில் முடிவில் அகண்டாநுபவம். 'ஸர்வாவயவ சோபைகளோடும் கூடின ஸமுதாய சோபையாலே பூர்ணமாய்' என்று ஆழ்வார் நெஞ்சை ஹோமம் வர்ணித்தது. இங்கே சொல்லும் ப்ரளயம் அவாந்தர ப்ரளயம். 'ஓர் இலையிலே தாயும் தந்தையு மில்லாததொரு தனிக் குழவியாய்' என்று ஹோமம். கர்ணனைத் தாய் ஒரு சிறு பெட்டியில் வைத்துக் கங்கையில் மிதக்கவிட்டாள். 'அடுக்குக் குலையாமல் மார்க்கண்டேயன் காணும்படி ஸர்வ லோகங்களையும் திருவயிற்றிலே வைத்தவன்' என்று ஹோமம். மார்க்கண்டேயர் அநுபவம் ஆழ்வார் நெஞ்சில் உள்ளதைக் காட்டிற்று. 'பாலகன்' என்பதில் 'க' என்னும் விகுதி சிறுமையைக் காட்டும். 'யசோதை குழந்தையும் பெரிய தென்னும்படி அத்விதீயனான பாலனாய்' என்று பிள்ளை. 'சிறு ப்ரஜைகள் புரோவர்த்தி பதார்த்தங்களை யெடுத்து வாயிலிடுமா போலே வைத்தானாய்த்து, பிள்ளைத்தனம் ப்ரளயத்தில் தன் அவடிதவடநத்தோடொக்குமென்னை அகப்படுத்தினபடியும்' என்று நாயனார். 'மருளேயின்றி உன்னை என்னெஞ்சகத் திருத்துந் தெருளே தரும்', 'திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்,' 'என்னை முற்று முயிருண்டு,' என்று பரமபதம் செல்லலும் அவஸரத் தநுபவங்கள். 'அந்நீலமேனி' 'நீலவரை' என்று திருவாய்மொழி முடிவி லநுபவம். 'நீலக்கடல் கடைந்தாய்' என்று அந்நீலமேனி ஒளியால் திருப்பாற்கடலே நீலக் கடலெனலாம்படி ஆயிற்று. 'அம்ருதமதந ஸமய சடுலதர மரகதமணி ஶ்யாமள திவ்ய மங்கள விக்ரஹ கிரணவஹரீ பரம்பராநுஷங்கத்தாலே அவிரளோந்மீளதபிநவ குவலயஜால பாரம்பரீ பரிமண்டிதா போகமானாற்போலே ஸர்வதோ நீலமான க்ஷீரார்ணவத்தை' என்று ஸாக்ஷாத் ஸ்வாமி யுரை.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீகோதாயை நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீநிகமாந்தமஹாதேஶிகாய நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. டி. இ. சடகோபாசார்யர், திருப்பாப்புலியூர்.]

[ஸஞ்சிகை 10 : பக்கம் - 349 தொடர்ச்சி]

இப் ப்ரபந்தம் விஷயாநுபூர்வியை ஒட்டி இரண்டு அர்த்தங்களாக வகுக்கப்பட்டு நிற்கும். முதல் அர்த்தத்தில் அடங்கிய பதினைந்து பாசுரங்களில், 'உஷஸ்யுத்தாய கோத்ரைஸ்ஸ்வைரந்யோந்யாபத்தபாஹவ: | க்ருஷ்ணமுச்சைர்ஜகுர்யாந்த்ய: காளிந்த்யாம் ஸ்நாதுமந்வஹம் ||' என்று ஸ்ரீ பாகவதோக்த ப்ரகாரமாக பக்த கோஷ்டீ ஸங்க்ரஹ ரூபமான பூர்வாங்கம் வர்ணிக்கப்படுகிறது. அநந்தரம், பதினைந்து பாசுரங்களில் பஜநீயாபிகமநம் ஸாங்கமாக ப்ரபஞ்சிக்கப் படுகிறது. பூர்வார்த்தத்தில் முதல் ஐந்து பாசுரங்கள் ஏற்கனவே ப்ரதிபுத்தர்களான ஸகிகளுக்கு ஸத்வோந்மேஷமும், அத்தால் வ்ரதாநுஷ்டாந விஷயத்தில் யதாவத்தான ஜ்ஞாநமும் ஶ்ரத்தையும் உண்டாவதற்காகச் செய்யும் உபதேஶ ரூபமாகும். பின்புள்ள பத்துப் பாசுரங்களில் அப்ரபுத்தர்களான மந்தப்ரக்ருதிகளை அவரவர் ஸ்வபாவ குண விபவாதிகளுக்குத் தக்கபடி ப்ரபோதநம் பண்ணி, இந்த மங்கள வ்ரதத்தில் அந்வயிக்கும்படி செய்யும் ப்ரகாரம் விஸ்தரிக்கப்படுகிறது. ஆத்ம ஜ்ஞாநத்துக்கு ப்ரதிபந்தமாய் நிற்கும் தஶேந்த்ரியங்களின் ஸங்க்யையை அநுஸரித்து, அப்ரபுத்தாதிகாரிகளை த்ஶதா விபஜநம் செய்து, இப்பத்துப் பாசுரங்கள் ப்ரவ்ருத்தித்திருப்பதாகவும் உத்ப்ரேக்ஷிக்கலாம்.

இப் ப்ரபந்தம் ஸ்ரீ பாகவத கதையை யொட்டி ஏற்பட்டிருப்பது மன்றி, இதன் பாவ விஶேஷங்களும் ஶுக ப்ரம்ஹத்தின் ஆஶயத்தை அநுஸரித்து நிற்பதும் விமர்ஶகர்களுக்குப் புலப்படும். வேதங்களை விபஜநம் பண்ணியும், வேதாந்தார்த்தங்களை ப்ரம்ஹ ஸூத்ர மூலமாய் நிஷ்கர்ஷம் செய்தும், வேதார்த்தங்கள் ஸர்வ ஜனங்களுக்கும் விஶதமாகப் புலப்படுவதற்காக மஹாபாரதத்தை ப்ரவர்த்திப்பித்தும், தன் மநஸ்ஸுக்கு ஶாந்தி ஏற்படாமல் நிர்வேதமடைந்து நின்ற வேதவ்யாஸ பகவானை நோக்கி நாரத மஹர்ஷி,

“𑌭𑌵𑌤𑌾𑌨𑍁𑌦𑌿𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌂 𑌯𑌶𑍋 𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌮𑌲𑌮𑍍 ।
𑌯𑍇𑌨𑍈𑌵𑌾𑌸𑍌 𑌨 𑌤𑍁𑌷𑍍𑌯𑍇𑌤 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌖𑌿𑌲𑌮𑍍 ॥
𑌯𑌥𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌯𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌾 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑍍𑌯𑌾𑌨𑍁𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌨 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌹𑍍𑌯𑌨𑍁𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌃 ॥

𑌨 𑌯𑌦𑍍𑌵𑌚𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌪𑌦𑌂 𑌹𑌰𑍇𑌰𑍍𑌯𑌶𑍋
𑌜𑌗𑌤𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌗𑍃𑌣𑍀𑌤 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ।
𑌤𑌦𑍍𑌵𑌾𑌯𑌸𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑍁𑌶𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾
𑌨 𑌯𑌤𑍍𑌰 𑌹𑌂𑌸𑌾 𑌨𑌿𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌶𑌿𑌕𑍍𑌕𑍍𑌷𑌯𑌾𑌃 ॥

𑌅𑌥𑍋 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌭𑌵𑌾𑌨𑌮𑍋𑌘𑌦𑍃𑌕𑍍
𑌶𑍁𑌚𑌿𑌶𑍍𑌰𑌵𑌾𑌃 𑌸𑌤𑍍𑌯𑌰𑌤𑍋 𑌧𑍃𑌤𑌵𑍍𑌰𑌤𑌃 ।
𑌉𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌯𑌾𑌖𑌿𑌲𑌬𑌨𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇
𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑌰 𑌤𑌦𑍍𑌵𑌿𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍍 ॥

𑌇𑌦𑌂 𑌹𑌿 𑌪𑍁𑌂𑌸𑌸𑍍𑌤𑌪𑌸𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾
𑌸𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌸𑍂𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌦𑌤𑍍𑌤𑌯𑍋𑌃 ।
𑌅𑌵𑌿𑌚𑍍𑌯𑍁𑌤𑍋𑌽𑌰𑍍𑌥𑌃 𑌕𑌵𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑍋
𑌯𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌗𑍁𑌣𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌣𑌨𑌮𑍍”

என்று பகவானுடைய திவ்ய கல்யாண குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் 𑌪𑍌𑌨𑌃𑌪𑍁𑌨𑍍𑌯𑍇𑌨 வர்ணித்து, அடங்கா மகிழ்ச்சியில் ஆழ்வதே உமது மநஸ்ஸின் அஸ்வாஸ்த்யத்துக்குத் தகுந்த ஔஷதமாகுமென்று உபதேசிக்க, அதன் உண்மையை யறிந்து வ்யாஸ பகவான் பகவத் குணங்களையும் சேஷ்டிதங்களையும் வர்ணிப்பதையே ப்ரதாந நோக்கமாயுள்ள ஸ்ரீமத் பாகவத புராணத்தை நிர்மாணம்செய்து சாந்தி பெற்று, அதைத் தன் குமாரனாகிய பரமஹம்ஸ பரிவ்ராஜகாக்ரேஸரனை ஸ்ரீ சுகப்ரம்ஹத்துக்கு உபதேசிக்க, அவரும் அதை ப்ரீதியுடன் க்ரஹித்து ப்ரவசநம் செய்தார் என்கிற வ்ருத்தாந்தத்தின் தத்வத்தை நன்குணர்ந்த ஆழ்வார்களும் அவர்களை அடியொற்றின நம் பூர்வாசார்யர்களும்,

‘𑌨𑌿𑌗𑌮𑌕𑌲𑍍𑌪𑌤𑌰𑍋𑌰𑍍𑌗𑌲𑌿𑌤𑌂 𑌫𑌲𑌂
𑌶𑍁𑌕𑌮𑍁𑌖𑌾𑌦𑌮𑍃𑌤𑌦𑍍𑌰𑌵𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌪𑌿𑌬𑌤 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌰𑌸𑌮𑌾𑌲𑌯𑌂
𑌮𑍁𑌹𑍁𑌰𑌹𑍋 𑌰𑌸𑌿𑌕𑌾 𑌭𑍁𑌵𑌿 𑌭𑌾𑌵𑍁𑌕𑌾𑌃 ॥’

என்றபடி ஸர்வ சாஸ்த்ரார்த்த ஸாரதமாம்ஶ பூதமான ஸ்ரீ பாகவத ப்ரக்ரியையே அநுஸரித்துச் சென்றிருக்கிறார்கள் என்பது வைஷ்ணவ ஸித்தாந்தமாகும். அவ்விதமே ஆண்டாளும் கோப கந்யகைகளின் ஸரணியை அநுவர்த்திப்பது யுக்தமே யாகும்.

முதல் பாசுரத்தில் ப்ரபந்தத்தில் ப்ரதிபாத்யமான வ்ரதத்துக்கு ப்ரதாநாங்கமான ப்ராதஸ்நாநத்தைச் செய்வதற்கு உத்யுக்தர்களாயிருக்கும் ஸகிகளை ப்ரபந்த கர்த்தாவாகிய ஆண்டாள் ப்ரரோசநம் பண்ணி, வ்ரதத்தின் உத்தேஶ்ய தேவதா விஶேஷத்தின் ஸ்வரூப ஸ்வபாவாதிகளையும், அதற்கும் தங்களுக்கு முள்ள ஸம்பந்த விசேஷத்தையும், அதனடியாகத் தங்களுடைய அபீஷ்டஸித்தியின் நிஶ்சயத்தையும் அருளிச் செய்கிறார். இத்தால் 'ஜஷூ ஹி விஜ௱ஷா௦ ஜொகெ ஸ௨ோஸவு்ாஸயாரணழ' என்கிற கணக்கில் மஹர்ஷிகளும் அவர்களுக்கொப்பான நம் பூர்வாசார்யர்களும் க்ரந்தமுகத்தில் வஸ்து நிர்த்தேச வ்யாஜத்தைக்கொண்டு மேல்கூறப் புகும் விஷயத்தை ஸங்க்ரஹித்திருக்கும் ப்ரக்ரியையே ஆண்டாளுக்கும் உகப்பானதென்று ஏற்படுகிறது.

1\. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்காள் !
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

லக்ஷ்மீ வாசகமான 'மா' என்கிற அக்ஷரம் முதல் இருப்பதால் இப் ப்ரபந்தம் மங்கள ப்ரத மென்பது ஸூசிதமாகிறது. இதுவும் இங்கு ப்ரபஞ்சிக்கப்படும் வ்ரதத்தின் உத்தேஶ்யம் கந்யகைகளுக்கு உத்தமபதி லாபத்தால் ஸௌமங்கல்ய ஸித்தியே என்பதற்கு அநுகுணமாகிறது. ஸ்ரீமத் ராமாயணத்திலும், '௨ா நிஷாஜ' இத்யாதியான ப்ரதம ஶ்லோகத்தில் இவ்வக்ஷரமே முதலில் அமைந்திருப்பது கவனிக்கத் தக்கது. இத்தால் ராமாயணத்துக்கு உரித்தான ஸ௨ேய௱ரொவ ந தாய௶கூாஜி காவ்யஶ்ரீயும் ஞ்ரேயஃவ்ரூஜகூமும் இங்கும் பொருந்துமென்று ஸூசிதம் போலும்.

'மார்கழித் திங்கள்' என்று சந்த்ரன் மார்க்கஶீர்ஷ நக்ஷத்ரத்துடன் பௌர்ணமீயில் சேர்வதைக் குறிப்பதால், உத்க்ருஷ்ட பதி ஸம்யோகம் இவ்ரதத்தின் பலம் என்பது ஒருவாறாக நிர்த்தேஶிக்கப்பட்டதாகும். இம்மாஸம் ஸ்ரீபாகவதத்தில் 'ஹெ௨ஞெ வூயஔ௨ ௨ாஸி' என்று குறிக்கப்பட்டது.

'மதி நிறைந்த நன்னாள்' என்பது சாந்த்ரமாந ரீதியில் அம்மாஸத்தின் முதல் தினமாகிய சுக்ல பக்ஷம் ப்ரதமையைக் காட்டுகிறது. 'மதிநிறைந்த' வென்பது 'கூவ௱ூ௨ணவக்ஷ' மென்பதற்குப் பர்யாயமாகும். 'நன்னாள்' என்பதால், '௨ாஸாநா௦ ௨ாமஶீஷெ௨ாஷி'

என்று கீதாசார்யன் தமது சுப விபூதிகளில் சேர்த்திருப்பதாலும், 'சுயம் ஸகாஜஸஂஹூாஷ: ஷிபயொ யஷஸ ஷிய௦வஷ| காலகூத ஐவாஹாதி யெந ஸ௦வஜூாஸூ-ஹ: ||' என்று இளையபெருமாள் திருத் தமையனிடம் இம்மாஸத்துக்கு ஃலஸம்ருத்தியால் ஏற்பட்ட ஏற்றத் தைப் புகழ்வதாலும், இம்மாஸம் மற்றவைகளைவிடச் சிறப்பு வாய்ந்த தென்று விதிப்பதால், இதன் முதல் நாள் எல்லா நாட்களுள் முதன் மையான தென்பது தானாகவே விளங்குகிறது. மேலும் இம்மங்கள வ்ரதத்துக்கு ஆரம்ப தினமாகையாலும், இது மேன்மை பொருந்திய தென்பதற்கு ஸம்சயமில்லை. 'ஆல்' என்பது த்ருதீயா விபக்தியின் ப்ரத்யயமா யிருந்தபோதிலும் 'சுஹா கூா௦ ஹூாவயிஷ்யாமி' இத்யாதி களில் போல் காலவாசி பதத்துடன் சேரும்போது அதிகரணார்த்தத் தைத் தருகிறது. மேலும் இவ்ரதத்துக்கு ஆரம்ப திநத்தின் சுபத்வம் ஓர் ஸஹகாரியாவது பற்றி இந்த த்ருதீயை கரணார்த்த முள்ளதென்றும் கொள்ளலாம். இவ்விரண்டு அர்த்தங்களுமே உத்திஷ்ட மென்பதும் அநுசிதமாகாது.

'நீராடப் போதுவீர்' என்றதால், ஏற்கனவே வ்ரதாங்கமான ஸ்நாநத்துக்குப் புறப்பட்டிருக்கும் அதிகாரிகள் 'போதுமினோ' [வாருங்கள் நாமெல்லோரும் சேர்ந்து போவோம்] என்று அழைக்கப் படுகிறார்கள். இதனால் எல்லோருடைய உத்தேசமும் ஏகரூப மென்றும், அநுஷ்டிக்கவேண்டிய க்ரியையும் ஸமாந மென்றும் ஏற்படுவதால், உபாகர்ம ஸ்நாநத்துக்கு ப்ரம்ஹசாரிகள் ஒன்று சேர்ந்து போவது போல் தத் ஸ்தாநத்தில் கந்யகைகளுக்கு ஏற்பட்ட இவ்ரத ஸ்நாநத் துக்கு எல்லோரும் ஒருங்கு சேர்ந்து போவதால் பரஸ்பரம் உத்ஸாஹ ஹேதுவா யிருப்பதுடன், பொழுது விடிவதற்குமுன் ஜலாஶயத்துக்குச் சிறுமிகள் தனியாய்ப் போவது அபாயகரமாகையால் எல்லோரும் சேர்ந்து போவதே உசித மென்பதும் ஏற்படுகிறது. தவிரவும்: ஏக ரூப மான பலத்தை ப்ரார்த்திப்பதற்கு ராஜ ஸந்நிதிக்கு ப்ரஜைகள் ஒன்று கூடிக் கூட்டமாகப் போய் நின்றால் சீக்ரமாகப் பல ஸித்தி ஏற்படுவது போல், இங்கும் நாமெல்லோரும் ஒரு திரளாகப் போய் நமது ஸ்வாமியின் எதிரே நின்று வேண்டுவோம் என்று அபிப்ராயம்.

'நேரிழையீர்' என்பதற்கு நேர்மையுள்ள [அதாவது: ருஜுவான] ஆபரணங்களை யணிந்தவர்களே! என்பது பொருள். இத்தால் வெளிப் பார்வைக்கு மட்டில் ப்ரகாசமாகவும் உள்ளே துச்சமாகவுமுள்ள டாம்பிகர்களுடைய பூஷணங்கள் போலன்றிக்கே, உள்ளும் புறமும் ஏக ரூபமான கட்டியாபரணங்கள் அணிந்துள்ளோரென்று சொன்ன தாயிற்று. நேர்மை என்பதற்குச் சிறப்பு என்று பொருள் கொண்டால், விலையுயர்ந்த ஆபரணங்களைப் பூண்டவர்கள் என்று அர்த்தமாகும். ஆபரணங்களைச் சொன்னது வஸ்த்ரங்களுக்கும் உபலக்ஷணமாகும்.

இது, தங்களுக்குப் பரமோத்தேஶமான ஸௌமங்கல்ய ஸித்திக்கு ஹேதுவாகிய வ்ரதவிஶேஷமானது பற்றி, கோப கந்யகைகள் மஹார்க்கமான வஸ்த்ராபரணாதிகளைத் தரித்துக்கொண்டு ஸ்நாநத்துக்குப் புறப்படுகிறார்கள் என்று த்யோதிதம். ஆயர் சிறுமியருக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் எவ்வாறு கிடைத்தன வென்பதற்கு, 'சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்காள்' என்ற விளியினால் விடையளிக்கப் படுகிறது. இது 'ஜயதி தேऽதிகம் ஜந்மநா வ்ரஜ꞉ | ஶ்ரயத இந்திரா ஶஶ்வதத்ர ஹி ||' என்கிற கோபிகா கீதையிலும், 'அஹோ ஶ்ரீமதாஹாத்ம்யம் கோபாநாம் காநநௌகஸாம்' என்கிற இந்த்ர வாக்யத்திலும் பேசப்பட்டபடி, ஸ்ரீ க்ருஷ்ண பகவான் எழுந்தருளியது முதல் நந்த வ்ரஜத்தில் ஏற்பட்டுள்ள ஸம்பத் ஸம்ருத்தியைக் காரணமாகவுடையதென்று ஸூசிதமாகிறது. 'சீர்மல்கும்' என்றதால், மேன்மேலும் இடைவிடாது செல்வம் வளர்ந்து வருகிறதென்று ஏற்படுவதால், 'ஶ்ரயத இந்திரா ஶஶ்வதத்ர ஹி' என்பது அநுவதிக்கப்பட்டது. 'செல்வச் சிறுமீர்காள்' என்றதால், இக்குமாரிகைகள் விஷயத்தில் பெரியோர்களுக்குள்ள மிகுந்த அன்பும் ஆதரவும் வெளியாகின்றன. இத்தால் கோப வ்ருத்தர்கள் முற்காலத்தில் கோபிகள் க்ருஷ்ண ஸமாகமத்துக்காகச் செய்த ப்ரவ்ருத்திகளுக்கு உபரோதம் செய்ததுபோ லல்லாமல், இப்போது அவர்களே மிக்க பரிவுடன் கந்யகைகளை அலங்கரித்து ஸ்நாநத்துக்குப் போக அனுப்பினார்கள் என்று ஏற்படுவதால், முன்பு நடந்ததற்கும் இப்போது ஆண்டாள் ஏற்படுத்திய நடைக்குமுள்ள வைலக்ஷண்யம் வ்யக்தமாகிறது. மேலும் 'நேரிழையீர்' என்பதில் ஔசித்யவாசியான 'நேர்' என்கிற பதத்தால் கந்யகைகள் ஸ்நாநோசிதமான வத்ராபரணாதிகளை யணிந்துகொண் டிருப்பதாக ஏற்படுவதால், முன் கோப கந்யகைகள் தம் வஸ்த்ரங்களை அவிழ்த்துக் கரையில் வைத்து நக்நர்களாக ஸ்நாநம் செய்த தர்ம வ்யதிக்ரமம் காரணமாக அவர்கள் பகவானுடைய உபாலம்பத்துக்கும் ஶிக்ஷைக்கும் பாத்ரமானதுபோல் இங்குக் கிடையாதென்று த்யோதிதம்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

வேதாந்த சிரோமணி நேடுந்தெரு. ரா. பத்மநாபாசார்யர்

இயற்றிய

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஷயமான

அந்தாதியின் பதவுரை

[ஸஞ்சிகை 10 : பக்கம் 357 : தொடர்ச்சி]

9. பெற்றதாயாய்ப் பத்தர் பேதமில்லாத் தந்தையுமாய்
மற்றுமுள்ள சுற்றமுமாய் மன்னியபொன் னிராசியுமாய்
எத்திசையு மென்னுடைய இன்னுருவாம் பாக்கியமாய்
உற்றமுனி சடகோபா உன்கழல்கள் அகலேனே.

பத்தர் = (தன்திருவடிகளில்) பக்தி பண்ணுகிறவர்களுக்கு,

பெற்ற தாயாய் = ஈன்றெடுத்த தாய்போல் போஷகராயும்,

பேதமில்லா தந்தையுமாய் = (அவ்விதம் தாய்போல் இருப்பது மன்றியில்) தகப்பனைப்போல் ஹிதம் செய்பவராயும்,

மற்றும் உள்ள சுற்றமுமாய் = (தாய் தந்தைகளைத் தவிர) மற்ற ஸுஹ்ருத்துக்களான உறவினரைப்போலே க்ஷேமத்தையே சிந்திப்பவராயும்,

மன்னிய பொன் இராசியுமாய் = அழிவில்லாத ஹிரண்யநிதிபோல் இஷ்டபூர்த்தி செய்பவராயும்,

என்னுடைய = அடியேன்போலுள்ள சிஷ்யர்களுடைய,

இன் உருவாம் பாக்கியமாய் = அழகான ரூபத்தை எடுத்து கொண்ட புண்ணியமோ என்று சொல்லும்படியாயும்,

உற்ற = அவதரித்த,

முனி சடகோபா = ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனே!

எத்திசையும் = எந்த இடம் சென்றாலும்,

உன் கழல்கள் = உன் திருவடிகளை,

அகலேனே = விட்டுப் பிரியமாட்டேன். (எப்பொழுதும் த்யாநித்த வண்ணமே இருப்பேன் என்றபடி.)

குறிப்பு—இவ்வுலகத்தில் ஒருவனுக்குத் தந்தையாயிருக்கும் ஒருவன், அவனுக்குத் தாயாகவும் இருக்க முடியாது. ஆகையால் அவன் தாயைக்காட்டிலும் பேதமுள்ள தந்தையேதவிர, பேதமில்லாத் தந்தை

யாகமாட்டான். அப்படியன்றியில் ஸ்வாமியானவர் மேலே சொல்லிய படி பக்தர்களுக்குத் தாயாயும் தந்தையாயும் மற்ற சுற்றத்தினராயும் இருப்பதால், ஸ்வாமியைப் பற்றி, "பேதமில்லாத் தந்தையுமாய்" என்றும் "பேதமில்லா மற்றுமுள்ள சுற்றமுமாய்" என்றும் அருளிச் செய்யப் பட்டிருக்கிறது.

கருத்து—ஸ்ரீ மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரை, "அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபன்" என்று ஸர்வ விதமான உறவினராகப் பாவித்தது போலவே, ஸ்வாமியையும் தாய் தந்தை முதலான ஸர்வவிதமான பந்துவாகப் பாவித்து ஸ்வாமியின் திருவடிகளை யாவரும் சரணமாகப் பற்றி உஜ்ஜீவியுங்கள் என்கிறார்.

அவதாரிகை—ஸ்வாமி உபயவேதாந்தாசார்ய ஸ்தாநத்தில் மூர்த் தாபிஷிக்தர் என்பதைத் தெரிவிப்பதற்காக, பகவத்விஷய ப்ரவசநம் செய்தருளின ப்ரகாரத்தை இதில் அருளிச் செய்கிறார்.

10. அகலாமே மாறனுரை அருத்தமுட னனைவர்க்கும்
தகவாலே யுரைக்கின்ற தன்மையுள்ள மாமுனியை
புகலாலே பற்றினார்க்குப் புரக்கின்ற நரசிங்கன்
தகவாலே முடிசூடித் தரித்தாரைப் பற்றினனே.

மாறன் உரை = நம்மாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தை,
அருத்தமுடன் = அர்த்தத்தோடு கூட,
அனைவர்க்கும் = யாவருக்கும்,
தகவாலே = கிருபையினாலே,
அகலாமே = (மனத்தைவிட்டு) அகலாமல் இருக்கும்படியாக,
உரைக்கின்ற = உபதேசிக்கிற தென்கிற,
தன்மையுள்ள = ஸ்வபாவத்தையுடைய,
மாமுனியை = யதி சிரேஷ்டராயும்,
புகலாலே பற்றினார்க்கு = சரணமென்று திருவடியை அடைந்தவர் களுக்கு,
புரக்கின்ற = (முன்னே தோன்றி) ரக்ஷிப்பவனான,
நரசிங்கன் = ந்ருஸிம்ஹனுடைய,
தகவாலே = கிருபையினாலே,
முடி சூடி = லோகாசார்ய ஸ்தாநத்தில் மூர்த்தாபிஷேகம் செய்யப் பட்டு,
தரித்தாரை = அந்த ஸ்தாநத்தை நிர்வஹித்தவருமான ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மகாதேசிகனை,
பற்றினன் = சரணமாக அடைந்தேன்.

கருத்து—ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் கீழ்ப் பாசுரங்களில் நிரூபித்த ப்ரகாரமாக, ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் ரஹஸ்யத்ரய ஸாரம் முதலிய பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளை ப்ரவசநம் பண்ணி ஶிஷ்யர்களுக்கு ஞானத்தை உண்டாக்கினது போலவே, நம்மாழ்வார் திவ்ய ஸூக்திகளையும் பூர்வாசார்ய வ்யாக்யாநங்களுடன் சிஷ்யர்களுக்கு மனத்தில் நன்றாகப் பதியும்படியாக உபதேசித்து ஞானத்தைக் கொடுத்த மஹோபகாரகராயும், பக்த ஸம்ரக்ஷகனை ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிஹ்மனை ஸாக்ஷாத்கரித்து அவனருளால் அளிக்கப்பட்ட ஆசார்ய ஸ்தானத்தைப் பெற்ற மஹா தபஸ்வியாயும் எழுந்தருளியிருந்தபடியால், அவ்வாசார்யன் திருவடிகளை வணங்குவதே க்ருதஜ்ஞர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உசிதம் என்று கருத்து.

அவதாரிகை—இந்த ப்ரபந்தத்தின் மேன்மையையும் இதை அநுஸந்திப்பவர்களுக்கு ஏற்படும் பயனையும் இதில் அருளிச்செய்து தலைக்கட்டுகிறார்.

11. பத்தியுள்ள சீனிவாச பரயோகி தன்பதத்தில்
பத்திபெறும் யோகியெனும் பராங்குசன்தன் சீருரையாம்
எத்திசையும் ஏத்தநின்ற சடகோப னந்தாதி
முத்திதரும் நரசிங்கன் முன்னருளுக் காதினமே.

பத்தியுள்ள = (ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் அளவில்லாத) பக்தியை யுடையவரான,

சீனிவாச பரயோகிதன் = ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹா தேசிகனுடைய, (19-ம் பட்டம் ஸ்வாமி)

பதத்தில் = திருவடிகளில்,

பத்திபெறும் யோகி எனும் = பக்தியையுடையவராயும் ஸந்யாஸாஶ்ரமம் பெற்றவருமான,

பராங்குசன்தன் = ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகனுடைய, (21-ம் பட்டம் ஸ்வாமி)

சீர் உரையாம் = அருளிச் செயலான,

எத்திசையும் ஏத்தநின்ற சடகோபன் அந்தாதி = எல்லா இடங்களிலும் கொண்டாடப்படுகிற ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் விஷயமான அந்தாதி என்னும் இப்ரபந்தமானது, (தன்னை அநுஸந்திப்பவர்கள் விஷயத்தில்)

முத்தி தரும் நரசிங்கன் முன் அருளுக்கு = மோக்ஷமளவும் கொடுக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிஹ்மனுடைய ப்ரதாநமான க்ருபை உண்டாவதற்கு,

ஆதினமே = காரணமாகும்.

கருத்து—இப்ரபந்தமானது மேலேசொல்லிய ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஸதாசார்யரிடத்தில் பரிபூர்ண கடாக்ஷம் பெற்று, அதனால் பரிபூர்ணமான ஞானம் பக்தி முதலியவைகளைப் பெற்ற ஸ்ரீபராங்குச யதீந்த்ர மஹாதேசிகனால் அருளிச் செய்யப்பட்டதாகையால் வக்தாவின் மேன்மையைப் பெற்றதாயிருப்பதாலும், ஒரு பாசுரம் அநுஸந்தித்து முடிந்ததும் அடுத்த பாசுரம் தானாக நினைவிற்கு வரும்படியான அந்தாதி ப்ரபந்தமாகையால் ப்ரபந்தத்தின் மேன்மை பெற்றதாக இருப்பதாலும், முன்னே ஸாதித்தபடி ஸ்ரீ ந்ருஸிம்ஹன் முதலானவர்களுடைய அம்சாவதாரமாயும் யாவரும் லோகாசார்யனாகக் கொண்டாடி வணங்கும்படியான கல்யாணகுணங்கள் நிறைந்தவராயும் இருக்கும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவ விஷயமாதலால் விஷயத்தின் மேன்மை பெற்றதாக இருப்பதாலும், இப்ரபந்தத்தை அநுஸந்திப்பவர்கள் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவருளால் சதுர்விதமான புருஷார்த்தமும் பெற்று வாழ்வார்கள் என்று கருத்து.

அந்தாதியின் பதவுரை முற்றிற்று.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபானு௵ கார்த்திகை௴

1௳	திங்கள்	—	வ்ருஶ்சிக ஸங்க்ரமணம், விஷ்ணுபதி, வ்ருஶ்சிக ஶுக்ல நவமீ திதி
3௳	புதன்	—	உத்தான ஏகாதசி
7௳	ஞாயிறு	—	திருமங்கையாழ்வார் திருநக்ஷத்திரம்
8௳	திங்கள்	—	விஷ்ணவாலய தீபம்
15௳	திங்கள்	—	அதிதி
16௳	செவ்வாய்	—	அஷ்டமி திதி
19௳	வெள்ளி	—	ஏகாதசி, த்வாதசீ திதித்வயம்
20௳	சனி	—	த்ரயோதசி திதி
22௳	திங்கள்	—	அமாவாஸ்யை
30௳	செவ்வாய்	—	வாப ஸங்க்ரமணம்: ஷடசிதி, வ்ருஶ்சிக ஶுக்ல அஷ்டமி திதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

வேனிற் கனவு

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M. A., வித்வான், L. T.]

திருக்கூடலூரில் எம்பிரானை ஓரிரவு கண்டு களித்து வண்டி கிடைக்காமையால், அங்குத் தங்கவேண்டி வந்தது. இல்லாவிடில் என் போன்ற மந்தமதிகள் திவ்ய தேசத்தில் தங்குவது ஏது? கருட மண்டபத்து ஹாலில் தன்னந்தனியாய் உறங்கினேன். பாதி இரவில் சில பக்ஷிகளின் 'கிரீச்' சென்ற ஒலியால் விழித்து எழுந்தேன். கோயில் வலப் புறத்து ப்ரவஹித்த காவிரி நதியிலிருந்து இனிய தென்றல் வீசியது மரங்கள் மாமணி வண்ணனை வணங்குவனபோல் அசைந்தாடின. கரிய மேகங்களிடைப் பிறைச் சந்திரன் போராடி அழுந்துவதும் எழுவதுமாக இருந்தான். சிறிது நேரத்தில் இனிய தேவ கான ஒலி கேட்டது. உடலெல்லாம் பரவசமாகி எழுந்தேன். உள்ளே சில அடிகள் சென்றேன். மஹாமண்டபத்தில் கோடி ஸூர்யன் இருந்தது போன்ற ப்ரகாசம் பளீர் பளீரென்று தோன்றித் திகழ்ந்தது. நிரதிசய லாவண்யத்துடன் கூடிய ஒரு மின்னற் கொடியாளும் பத்துப் பன்னிரண்டு திவ்ய ஸூரிகளும் இனிய குரலில் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். ஒரு தூண் மறைவில் ஒதுங்கி நின்றேன். உடம்பெல்லாம் படபட வென்றது; வியர்க்க ஆரம்பித்தது.

நீல ஜீமூதம்போல் இனிய குளிர்ந்த வடிவும், நீண் முடியும், வரையன்ன நாற்றோளும், சுடராழியும், சங்கும் தரித்த ஒருவர், கம்பீரமாக நின்றார். இவரைத் திருக்கூடல் தேவாதி தேவனென நினைத்தேன். ஆனால் திருமார்பில் ஸ்ரீபுஷ்பவல்லி மிளிர்ந்து வீற்றிருக்கக் காணோம். அதனால் இவர் ஒரு நித்ய ஸூரியே எனத் துணிந்தேன். தூணின்மேல் தலை சாய்த்துக் கரங் குவித்தேன்.

ஆயிரம் வீணைகள் மீட்டப்பெற்றது போன்ற இனிய ஒலியால் அவர் பேசினார். "மஹநீயர்களே! நமக்கு ஸர்வேஸ்வரன் எதற்காகக் கரண களேபரங்களைத் தந்தது? எனக்கு விளக்க வேண்டும்" என்று புன்னகை புரிந்த வண்ணம் கேட்டார். வடிவிலும் முகப் பொலிவிலும் ஒத்த மூன்று திவ்ய புருஷர்கள் முன் வந்தனர். கை குவித்த வண்ணம் "ஸர்வேஸ்வரனது பரத்வ ஸர்வாந்தர்யாமித்வ ஸர்வ சக்தித்வ ஸர்வ ரக்ஷகத்வாதி குணங்களை அந்தாதி பாடிப் பணிந்து போற்ற"

என்றனர். ப்ரஸ்நம் செய்த ஸூரியானவர் கைகுவித்து, "ஆழ்வீர்! மகிழ்ந்தேன்" என்று சொல்லி அவர் பக்கல் நின்ற ஒரு தேஜோராசியைப் பார்த்து நின்றார். அத்தேஜோராசியின் கையில் இருதாளங்கள் இருந்தன. அப்பெருமான் "ஐயனே! ஸர்வேஸ்வரனே பரனென்று அறுதியிட்டுத் திருமாமகள், ஆழி சங்கு அடியவர் இவருடன், அவன் இருக்கும் சேர்த்திக்குப் பல்லாண்டு பாடி இத்தகைய ரம்யஜாமாதாவான பரம புருஷனுக்கு ஒரு பெண்ணைக் கந்யாதாநம் செய்து கொடுக்க" என்றார். நித்யஸூரி பெரும் ப்ரீதியுடன் தலை வணங்கிப் பக்கலில் நின்ற மின்னற் கொடியைப் பார்த்தார். கோகிலங் கூவுவது போல் அம்மின்னிடையாள் "ஸ்ரீத்வாரகாநாதனை நோன்பு நோற்றடைந்து ப்ரத்யங்கம் தாபந் தீரப் புல்கிக் களித்து, அவனைக் கால் பிடிப்பாள் என்ற பதம் பெற்று, அவனுடைய "உடனமர் காதல் மகளாகுவதே" என்றாள். நித்யஸூரி மயிர் சிலிர்த்துப் பேரானந்த மடைந்து பக்கலில் நின்றவரை நோக்கினர். மணிமகுடம் தரித்த மன்னன் கோலத்தில் நின்ற அவர், தாளுந் தடக்கையுங் குவித்து வணங்கி, "ஸ்ரீராமாவதாரத்தை வாயாரப் பாடி அநுபவித்து அவ்வவதார புருஷனிடம் ஈடுபட்ட ஸ்ரீவைஷ்ணவரே தஞ்சமென் றிருக்க" என்றார். திவ்யஸூரி மகிழ்ந்து அப்பால் நோக்கினர். தோளில் மண் வெட்டியும் பூங்குடலையும் திகழும் ஒரு திவ்ய புருஷன் முன்வந்து, "திருவரங்கப் பெருஞ் செல்வனையே உபாயோபேயமாய்ப் பற்றி, அவனுடைய தொண்டரடிப் பொடியே தாரக போஷக போக்யங்களாய்க் கொள்ள" என்றார். இதற்குள் மற்றொரு திவ்ய புருஷன் முன் வந்தார். திரித்த சடையும் விரிந்த நோக்கும் உடைய அவர் ஒரு யோகிபோல் தோன்றினர். "ஸ்ரீஹ்ருதய குஹாவாஸியான கமலா காந்தனை த்யானித்து அவனே தஞ்ச மென்றிருக்க" என்றார். பின்புற மிருந்து கையில் வேல் தரித்த ஒரு பரம ஸுந்தர புருஷன் "ஓஹோ! பெரும்புலியூருக்கு அவ்விடத்துத் திருவாக்கினால் பாசுர மில்லாது போனதற்கு இப்பொழுது காரணங் கண்டேன். பெரும்புலியூர் அழகியார், ஹ்ருதய கஹ்வரத்திலன்றோ எழுந்தருளியிருந்தார்" என்றார். யாவரும் சிரித்தனர்.

உடனே கையில் யாழ் வைத்திருந்த ஒரு திவ்ய புருஷன் முன் வந்து, "ஐயனே! ஸ்ரீரங்கராஜனை வாயினாற் பாடி மனத்தினாற் சிந்தித்து, அவ்வடிவழகைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாது மகிழ்வதே" என்றார். சற்று நேரம் யாவரும் பேசவில்லை. நித்யஸூரி, கையில் வேல்தரித்த மஹாபுருஷனை வணங்கி "ஸ்வாமிந்! தேவரீர் ஏதேனும்..........." என, அம்மஹாநுபாவன் முன்வந்து "உலகத்தில் ஸ்ரீய:பதியின் அர்ச்சா திருமேனிகளையே உபாயோபேயமாய்ப் பற்றி, அவன் கோயில் கொண்ட திவ்ய தேசங்களில் உழன்று திரிவதையே தேஹயாத்ரையாய்ப் பெற்று, அவனுடைய பரம போக்யமான அழகில் மதிமயங்கிக் களித்துப் பெண்மை ஏற்று அநுபவிப்ப

தற்கு'' என்றார். இவர் பேசி முடிந்ததும், இவரது சொல்லைத் திருக் கூடல் நாதனே ஆமோதிப்பதுபோல் மேகம் 'குமு குமு' என்று மந்த்ர த்வனி காட்டியது. நறுமணம் பொருந்திய மலர்கள் தூவப்பெற்றன. நித்யஸூரி அவ் வேலழகரைக் கட்டி யணைந்து கண்ணீர் சொரிந்து' "என் கற்பகமே!'' என்று ஆனந்தக் கூச்சலிட்டார். பின்னர், அப்பால் தனது இனிய உடலில் வகுளமாலை அசைய ஒரு மஹாந் முன்வந்து "பூஜ்யரே! இம்மஹரீயர்கள் சொன்னவை யாவும் எனக்குப் பூர்ண னந்தமே. ஸ்ரீபரகால நாயகியின் வார்த்தைகளில்தான் பக்ஷபாதம்'' என்றருளிச் செய்தார்.

* * * * *

திவ்ய ஸதஸ் மறைந்தது. நான் கட்டாந் தரையிலேயே படுத் திருந்ததை உணர்ந்தேன்; புரண்டு புரண்டு பிதற்றினேன். அம்மஹா புருஷரின் அருள்நிறைந்த வடிவம் என் மனத்தைக் களிப்பித்தது. அவர்களை எங்குப் போய் காண்பேன்? கோயில் அமைதியா யிருந்தது. ஸ்ரீகூடல்நாதன் திருவிழாக் காலங்களில் ஏறிச் செல்லும் அநந்த கருட ஹநுமத் ப்ரப்ருதி திவ்ய வாஹநங்கள், தங்கள் கருணைக் கண்களால் என்னை இமைகொட்டாது நோக்கின. இவ்வுடலை, நமக்கு இறைவன் தந்தது எதற்கு? இக்கேள்வியே என் மனத்தில் த்வனித்தது. என் உதடு சிறிது அசைந்தது. கல்லன்ன மனமும் கொஞ்சம் கரைந்தது. "யஸ்ய நிஃவஸிதம் வேதா:'' என்கிறபடி "அர்ச்சாநுபவமே தனக்கு மூச்சுக் காற்றாய்க் கொண்ட ஆலிநாடன் அடியிணையைப் பணிந்து போற்றவே'' என்று நான் புலம்பியவண்ணம் எழுந்து நின்றேன். கீழ் வானம் வெள்ளென் றிருந்தது. கன இருளகன்றது. நீராடிவரும் பாக வதர்கள் "கோவிந்தா! வாஸுதேவா!'' என்று அழைத்துவரும் சொல் என் உள்ளம் புகுந்து குளிர்ந்தது.

காணுங் காட்சி

சென்ற ஜூலை மாதத்திய ஸஞ்சிகையில், இத்தலைப்பின்கீழ், நாம் இப்போது உலகில் காணும் காட்சி மிகவும் பயங்கரமான காட்சியாயும், உண்மையாய்ப்ரத்யக்ஷமாய் எல்லோரும் காணும் காட்சியாயும் இருக்கிறதென்று கூறி, இந்த விஶ்வரூபத்தை அடக்கிக்கொண்டு, அழகிய அர்ச்சாரூபங்களில் பகவானைக் காட்சி தரும்படி ப்ரார்த்திக்கப்பட்டது.

மேற்கூறிய இரண்டு ஸ்வரூபங்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு உரியன வென்பது, ஶ்ருதி ஸ்ம்ருதி இதிகாஸ புராணங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஶ்ரிய: பதித்வமும், கருட வாகநத்வமும் எப்படி ஸ்ரீமந் நாராயணனுக்கே உரியனவோ, அப்படியே விஶ்வரூபமும் அவனுக்கே உரியதாகும். 'ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ:' என்றும், "புருஷ ஏவேதம் ஸர்வம்" என்றும், 'விராஜோ அதிபுருஷ:' என்றும், 'அந்தர்ப் பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்திதः' என்றும், 'அநந்தமவ்யயம் கவிம் ஸமுத்ரேந்தம் .விஶ்வ ஶம்புவம்' என்றும். "ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஶ்வரூபாயவை நம:" என்றும் ஶ்ருதிகளில் கூறியபடியும், "ஸ்ரீ கோவிந்த கோவிந்த கோவிந்த, அத்ய ஸ்ரீ பகவத:, மகாபுருஷஸ்ய, ஸ்ரீ விஷ்ணோ ராஜ்ஞயா ப்ரவர்த்தமாநஸ்ய" என்று நித்ய நைமித்ய கர்மாநுஷ்டாநங்களில் விதிக்கப்பட்ட ஸங்கல்ப வாக்யங்களாலும், ஸ்ரீமத் ராமாயணத்தில், பிரமன், கருத்மான் இவர்களின் ஸ்தோத்ரங்களாலும், ஸ்ரீ பாகவதத்தில் யசோதைப் பிராட்டியார் கண்ணன் திருவாயிற் கண்ட காட்சியாலும், மஹாபாரதத்தில் துர்யோதனதியர் ஸபையிற் கண்ட காட்சியாலும், அர்ஜுனன் தேர்த்தட்டிற் கண்ட காட்சியாலும், இந்த விஶ்வரூபம் பகவானுக்கு உரியதென்று ஏற்படுகிறது. ஸ்ரீ ஆளவந்தாரும், "க: ஸ்ரீஶ்ரிய:, க: புண்டரீக நயந: புருஷோத்தம: க: கஸ்யாயுதாயுத ஶதைககலாம்ஶகாம்ஶே, விஶ்வம் விசித்ர சிதசித் ஸ்வவிபாகவ்ருத்தம்" என்றார். "பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்" என்று நம்மாழ்வாரும், "சிலம்பும் செறி கழலும் சென்றிசைப்ப விண்ணுறுலம்பிய சேவடிபோய் அண்டம்—புலம்பிய தோள், எண்டிசையும் சூழ இடம் போதா தென் கொலோ, வண்டுழாய் மாலளந்த மண்" என்று பேயாழ்வாரும் பகவானுடைய இந்த விஶ்வரூபத்தை வியந்து கூறியிருக்கின்றனர். ஜகத்துக்கு நிமித்த காரணமும் உபாதாந காரணமும் அவனே யாதலால், இந்த ஸ்வரூபம் அவனுக்கு இயற்கையாகவே அமைந்துளது. மூலமாயை அவனுக்கு வஶ்யப்பட்டதால், அவன் இந்த ரூபத்தைத் தெரியவொட்டாமல் மறைத்து வைக்கவும், வேண்டும்போது வெளிப்படுத்தவும் வல்லன். எப்படி முள்ளம்பன்றி தன் முட்களை விரிக்கவும் அடக்கவும் கூடுமோ, அப்படியே பகவான் இந்தப் பயங்கரமான விஶ்வரூபத்தை அடக்கவும் வெளிப்படுத்தவும் கூடும். இது அவனுக்கு விட்டுப் பிரியாத ஒரு கவசமாக அமைந்திருக்கிறது. இதுபற்றியே "மாயா பலேந பவதாபி நிகுஹ்யமாநம்" என்றார் யாமுநார்யரும். 'மாயன்' என்றும், 'நெடுமால்' என்றும் அவனுக்குப் பெயரமைந்தது இதுபற்றியேபோலும். மற்றத் தெய்வங்கள் தம்மைக் குறித்துத் தவம் செய்தவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்துவிட்டு, அதனால் அத்தெய்வங்களுக்கே கஷ்டங்கள் நேரும்போது, பகவான் தன்னுடைய மாயா பலத்தினால் அவர்களைக் காப்பாற்றியதாகவும் புராணங்கள் கூறும். ஹிரண்யன், பூமியிலும் ஆகாயத்திலும் இரவிலும் பகலிலும், மிருகங்களாலும் மனிதர்களாலும் ஆயுதங்களாலும் சாகாதிருக்க வரம் பெற்றான். அவனைக் கொல்லத் தூணினின்றும் அந்தியம் போதில் அரியுருவாய்த் தோன்றித் தமது திருத்துடையில் வைத்துத் தமது திருவுகிரினால் மார்பைப் பிளந்து ப்ரஹ்லாதாழ்வானை ரக்ஷித்துப் பூபாரம் தீர்த்தது சரித்திரத்தில் நிகழ்ந்த விஷயமேயன்றிக் கட்டுக்கதை யன்று.

இந்தப் பெரிய பயங்கரமான ரூபத்தை அவன் எப்போதும் எல்லாருக்கும் காட்டிக்கொண்டிருந்தால் உலக வ்யாபாரம் நின்றுவிடும். இதுபற்றியே ஸ்ரீதொண்ட

ரடிப் பொடிகள், "உற்றபோதன்றி நீங்கள் ஒருவனென் றுணரமாட்டீர்" என்றார் போலும். இனி இந்த ரூபத்தைவிட்டு, நாம் ப்ரார்த்தித்த மற்றொரு உருவத்தைப் பற்றி விசாரிப்போம்.

புருஷர்களுங் கண்டு மோஹிக்கும்படியான அழகான உருவம் பகவானுக்கே உரியது. "ஆடவர்க ளெங்ஙன் அகன் றொழிவார்" என்றார். அவனுடைய பக்தர் இந்த அழகிய ரூபத்தைக்கொண்டே மோஹிநியாக அஸுரரை மயக்கி, அம்ருதத்தை அவர்களுக்குக் கொடாமல் தவிர்த்தான். தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகள் பகவானைக் கண்டு ஆலிங்கநம் செய்துகொள்ள ஆசைப்பட்டனர். அவர்கள் மநோபீஷ்டத்தை நிறைவேற்றத் தாம் ஆய்ப்பாடியில் கண்ணனாக அவதரித்து, அவர்களைக் கோபிகா ஸ்த்ரீகளாக அவதரிக்கச்செய்து, அவர்களோடு லீலைகளைச் செய்தான், அவன் திடீரென்று மறைந்ததும், அவர்கள் அவனைக் காணாது அலைந்ததும், பிறகு அவன் புலப்பட்டதும், அவர்களுக்குப் பேரானந்தம் உண்டாயதும், "தாஸா மாவிரபூச் சௌரி: ஸ்மயமாந முகாம்புஜ: பீதாம்பரதரஸ்ரக்வீ ஸாக்ஷாந் மந்மத மந்மத:" என்ற ஶ்லோகத்தால் விளங்கும். இதுபற்றியே சதுர்வித புருஷார்த்தங்களில் காமத்தை "கண்ணனுக்கே ஆமது காமம்" என்றார். இந்த அழகிய திருமேனியையும் அவன் தனது இஷ்டப்பட்டவர்களுக்கே காட்டுகிறான். இதுபற்றியே, 'பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்" என்றார் ஆழ்வார். இந்த ரூபத்தின் எல்லை தான் ஆஶ்ரித பரதந்த்ரனாய், அவாப்த காமனாய், அர்ச்சாவதாரங்களில் நாம் கண்டு அநுபவிக்கக்கூடிய காட்சியாகும். அதுவும் அவன் இஷ்டப்பட்டால் மாத்ரமே கண்டு அநுபவிக்கலாவது. மஹா யோகிகளான பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும், திருவிளக்கேற்றித் தேடியும் காணக்கூடாத தம்முடைய அழகிய ஸேவையைப் பேயனுக்கே முதல் முதல் வெளிப்படுத்தினான் திருக்கோவலூரில். தீண்டாத குலத்திற் பிறந்த திருப்பாணாழ்வாருக்கு அத்ருஷ்ட நயநத்தைத் தந்து தனது திருமேனியைக் காட்டியருளினான்.

உபய விபூதிகள்போலவே மேற்குறித்த உபய ஸ்வரூபங்களும் அவனுக்கே உரியவை யாகையாலும், அவன் உகந்தவர்களுக்கே அவற்றை அவன் புலப்படுத்துகிறானகையாலும், அவனைப் பலவந்தத்தினால் அடைவது துர்லபம். ஆகையால் அவனை வணக்கத்துடன் ப்ரார்த்திப்பது தவிர வேறு உபாயமில்லை.

பகவானுடைய உபய ஸ்வரூபங்களில், அபரிச்சிந்நமாய் நமது சக்திக் கடங்காத விஶ்வரூபத்தை நாம் ஸதா கண்டு ஸகிப்பது கூடாத கார்யம். ஆகையால் "ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி, நாங்கள் நம்பாவைக்குச் சாற்றிநீராடினால், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து, ... நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்" என்றபடி, அர்ச்சா விக்ரகத்தை நீராட்டிப் பூச்சூட்டி அலங்கரித்துச் ஸேவிப்பதே நமக்கு க்ஷேமத்தை விளைவிக்குமென்று அதையே உகந்தருளும்படி வேண்டிக் கொள்கிறோம். ஆயினும் உலகத்தில் நாஸ்திகம் ஓங்கி ஆஸ்திகம் குன்றி நெருக்கடியான நிலை ஏற்படும்போதெல்லாம், பகவாந் தன்னுடைய சக்தியைக் காட்டிப் பரத்வத்தை ஸ்தாபிக்க இந்த விஶ்வரூபத்தைக் காட்டவேண்டியதும் அவஶ்யமேயாகும். இல்லாவிடில் பூதேவியை வருத்தும் கலிபுருஷனை அதட்டி, ஸாதுக்களை ரக்ஷிக்கும் சக்தி பகவானுக்கு உண்டோ, வெறும் அழகிய மாப்பிள்ளைதானோ, என்று ஸம்சயிக்க நேரும். "தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம், பபூவ ஹ்ருஷ்ட்வா வைதேஹி பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்றார் வால்மீக மஹர்ஷியும்.

மேற்குறித்த இரண் டுருவங்களையும் காட்டியே கலியுக முதலில் முதலாழ்வார்களைத் தேற்றினான். அவர் ஏற்றிய விளக்கும் கண்ட காட்சியும் ஆசார்யர் அநுக்ரகத்தால் நாளதுவரையில் நம்மையும் தேற்றி வருகிறது. அவ்விளக்கும் அத்தர்சநமும் என்றும் அணையாதிருக்கும்படி திருவருள்புரியும்படி பகவானைப்ப்ரார்த்திக்கின்றோம்.

"ஓரடியும் சாடுதைத்த ஒண்மலர்ச் சேவடியும்
ஈரடியும் காணலாம் என்னெஞ்சே—ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய்த் தாரானை
மாயவனையே மனத்து வை"

சை. கிருஷ்ணமாசார்யன்

2/10/07

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

காரயித்ருத்வ நிரூபணம்

[வித்யாரத்நாகர கோடைவாசல் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்யர்]

(திருமலை திருப்பதி தேவஸ்தாந ஆஸ்தாந வித்வாந்)

இந்த ஸ்வாமி பராயத்தாதிகரண ஶ்ருதப்ரகாசிகையிலும் இந்த அபிப்ராயமே வெளிப்படுகிறதென்று கூறிவிட்டு, அதற்கு ப்ரமாணமாகக் குறிப்பிடுவது இவ்வளவுதான். "ப்ரதமப்ரவ்ருத்திஷு இச்சாஜநகத்வாபேக்ஷயா உபேக்ஷகத்வம் ந ஸ்யாத்" என்று சங்கை. உச்யதே ந தே தோஷா: ப்ரஸஜ்யந்தே. ஸாதாரணோபகார விஶேஷோபகார பேதேந ஸர்வாஸாம் ப்ரவ்ருத்தீநாம் வ்யவஸ்திதத்வாத்" என்பது ஸமாதாநம். இந்த வாக்யத்தினால் ஜீவர்களின் ப்ரதம ப்ரவ்ருத்திக்குக் காரணமான ஜ்ஞாநேச்சாதிகளில் ஈஶ்வரனுக் குள்ளது ஸாதாரண காரணத்வம், த்விதீயாதி ப்ரவ்ருத்தி ஹேதுக்களான அவற்றில் விசேஷ ஹேதுத்வ மென்றொரு வைலக்ஷண்யம் சொல்லியதாகுமேயல்லது, ப்ரவ்ருத்தியைத் தடுக்காமலிருப்பதே ஸாதாரணோபகார மென்றும் அது கொண்டே ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரன் காரயிதாவென்றுங் கூட ஸித்தித்துவிடுமா! ஸித்திக்கா தென்பதோடு மட்டும் நின்றுவிடாமல், ஆங்கவன் காரயிதா வல்லனென்றுகூடக் கட்டாயமாய் ஏற்பட்டுவிடும். அஃதெப்படியெனில்: இந்த வாக்யத்தில் ப்ரதம ப்ரவ்ருத்திகளில் இச்சாஜநகத்வ முண்டானால் உபேக்ஷகத்வமில்லாமற் போம்படியாகும் என்று ஆபாதநஞ் செய்திருக்கிறாரே. இதற்கு நிதாநமாக இதை யொட்டி 'ப்ரயோஜயித்ருத்வாவஸ்தாயா விஶேஷோ ஹி வாச்ய:' என்பதொன்றை ஆசிரியர் வரைந்து வைத்திருக்கின்றார். இதனால் ஏற்படுவதென்ன! 'ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ஈஶ்வரன்தான் இச்சையை உண்டாக்குகிறானென்னும் பக்ஷத்தில் த்விதீயாதி ப்ரவ்ருத்திகளில் அவனுக்குச் சொல்லப்படுகிற இச்சா ஜநகத்வரூபமான ப்ரயோஜயித்ருத்வத்தை ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் சொல்லியதாகு மாதலால், அவற்றைவிட இதற்கு வாசியில்லாமற் போய்விடும் எனவே; இதில் உபேக்ஷகத்வம் சொல்லியது தவறாகும்' என்பதுதான். இதன் விளைவென்ன! சேதநருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரனுக்கு ப்ரயோஜயித்ருத்வமே யில்லை யென்றால் அதனிலும் நெருங்கியதான காரயித்ருத்வத்தைப்பற்றிய கதையென்ன! ஐந்தே யில்லையென்றால் ஐம்பதைப்பற்றிக் கேட்க வேண்டுமோ! இவ்வளவுவரையிற் சென்று முடிவடைவதான இந்த வாக்யம் இடையில் தமக்கு இடராகிநிற்பது இந்த ஸ்வாமிக்குப் புலப்படவில்லைபோலும். அது எவ்வாறாயினும் இந்த வாக்யத்தின் பூர்வோத்தர ஸந்தர்ப்பத்தைத் தெளிவுற யாமிங்குக் காட்டுகின்றோம். கீழே அதிகரணாந்தரத்தில் "க்ஷேத்ரஜ்ஞாஸ்து—ஸ்வயமேவ ஸ்வஜ்ஞாநாநுஸாரேண புண்யாபுண்யரூபகர்மாணி உபாதததே" இதி ஸ்ரீபாஷ்ய பங்க்தி. இதனாலும், "புண்யாபுண்யயோ: ப்ரவ்ருத்தஸ்ய ப்ரவ்ருத்திஷு அநுமோதநேச்சயா, ததநுமோதநஜ்ஞாநம் ச க்ஷேத்ரஜ்ஞாயீநமேவ ஸம்பவத உபேக்ஷகத்வாத்" என்று இதன் வ்யாக்யாந பங்க்தி. அதனாலும் சேதநருடைய ப்ரதம ப்ரவ்ருத்திக்கு ஹேதுக்களான இச்சாதிகளில் அவன் தானே ஸ்வதந்த்ர னாதலால், அதனில் ஈஶ்வரன் உபேக்ஷகனேயென்று சொல்லப்பட்டது. இங்கும் "ஸர்வாஸ்வபி க்ரியாஸு ... ஷேண க்ருத ... ப்ரயத்நம், உதாஸீநோபேக்ஷ்ய"

என்கிறது ஸ்ரீ பாஷ்ய பங்க்தி. இதனாலும் "உதா3ஸீநவதே3வேக்ஷ்ய இதி, ஜநந ப்ரயத்நப்ரவ்ருத்திவிஷயாம் பரமேஶ்வரோபேக்ஷகத்வம் ப்ரத3ர்ஶிதம்" என்று இதன் வ்யாக்யையான ஶ்ருதப்ராகாஶிகை; இதனாலும் இவ்வர்த்தமே உறுதி செய்யப்பட்டதாகிறது. இதன்மேல் இப்படியொரு சங்கை ஜனிக்கிறது. 'ப்ராதமிக இச்சா ப்ரவ்ருத்திகளில் ஈஶ்வரனுக்குக் காரணத்வ மில்லையாயின், அவனுக்குச் சொல்லும் ஸர்வகாரணத்வம் பாதிக்கப்பட்டுப்போகும்; அதன்வாயிலாக ஸர்வபல ப்ரதத்வமும் குலைந்துபோகும். இச்சாதிகளும் பூர்வ கர்மங்களின் பலவிசேஷங்களென்றல்லவோ கொள்கை? இதற்காக ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ஈஶ்வரன்தான் இச்சையையுண்டாக்குகிறானென்றாலோ, முற்கூறியபடி ஆங்கவனே உபேக்ஷகனென்றது பொய்யாகும். இதற்கு வழியென்ன!' என்கிற இச்சங்கையை "ப்ரத2மப்ரவ்ருத்திவிஷயஜ்ஞாநஜநக காரணேஷு உபேக்ஷகத்வே ஸர்வஸ்ய ப்ரயோஜயித்ருத்வாபவாதாச் சேஷ்டோஹாவாத:" என்கிற பூர்வ வாக்யத்தினாற் கிளப்பிக்கொண்டு, "உபேதே ஹேதுஹேதோஷா: ப்ரஸஜ்யந்து ஸாதாரணோபகார விஶேஷோபகாரபேதே3ந ஸம்ப்ரஸாதநோபபத்தீநாம் பரிஹர்தவ்யாஸ்" என்கிற உத்தர வாக்யத்தாலே ப்ரதம ப்ரவ்ருத்திக்கு ஹேதுக்களான ஜ்ஞாநேச்சாதிகளில் ஈஶ்வரன் ஸாதாரண காரணமாக மாத்ர மிருப்பதைக்கொண்டு அதிலவனே ஸாதாரண உபகாரகனென்கிறது. (இதையன்றி குறுக்கே விழுந்து தடுக்காமலிருப்பதைக்கொண்டல்ல.) இது ஸர்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஸாதாரணம். ப்ரதம ப்ரவ்ருத்தியில் இதைமாத்ரஞ் செய்துவைத்து, மேலே அதிகப்படியாகத் தலையிடாமல் ஈசன் இவ்வளவோடு ஒதுங்கி நிற்கின்றமையினால், ஆங்கவனே உபேக்ஷகனென்றும்சொல்கிறது. த்விதீயாதி ப்ரவ்ருத்திகளிலோவெனில், அநுமதி ப்ரதாநாதிமுகத்தாலே விசேஷ காரணமா யிருப்பதனால், அவற்றுக்கு அவனே ப்ரயோஜயிதா வென்கிறது. குறித்த ஸாதாரண காரணத்வத்தைக் கொண்டே ஈஶ்வரனுக்கு ஸர்வ காரணத்வ ஸர்வ பல ப்ரதத்வங்கள் குறையற ஸித்தித்துவிடுமாதலால், இனி காரணத்வ விஷயமாகவோ பல ப்ரதத்வ விஷயமாகவோ விபரீத சங்கைக்கு இடமில்லையென்று ஆசிரியர் ஸமாதாநங் கூறியிருக்கின்றார். இந்த வாக்ய ஸந்தர்ப்பத்தால் ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரன் காரயிதா வென்கிற அபிப்ராயமே வெளிப்படுகிறதென்கிறதற்குக் கிஞ்சித்தும் ஔசித்யம் கிடையாது.

இதிருக்கட்டும். ப்ரதம ப்ரவ்ருத்தியில் இச்சா ஜநகத்வத்தை அங்கீகரிக்கும் பக்ஷத்தில் ப்ரயோஜயித்ருத்வ தசையைவிட உபேக்ஷகத்வ தசை வாசியற்றதாய் விடுமே யென்று எழுந்த ப்ரக்ருத ப்ரஶ்நத்திற்கு அளிக்கும் ப்ரதிவசநத்தில் ப்ரயோஜகத்வத்தைக் காட்டிலும் உபேக்ஷகத்வத்தைப் பற்றி ப்ரபல பாதகமான காரயித்ருத்வத்துக்கு அதனோடு ஸம்மேளநமோ அந்தர்ப்பாவமோ தாத்ரூப்யமோ பொருந்துமென்று நினைப்பதற்கு ஈஷத்தேனும் இடமுண்டா ? தடியை எலி தின்றுவிட்டதென்ற பிறகு அப்பத்தைப் பற்றிக் கேட்பதேன் ? எனவே, இந்த விடத்தில் ப்ரவசந கர்த்தாவுக்கு அபிமத லாபம் அணுவளவு மில்லை. நிற்க: இவ்வதிகரணத்தில் இந்த ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்திலேயே இவ்வாக்ய ஸந்தர்ப்பத்துக்கு முன்னுள்ளதான ஒரு வாக்யத்தை மனத்திற்கொண்டு நம் ப்ரவசநகர்த்தா "க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து", இத்யாதி ஸூத்ர ஶ்ருத ப்ரகாசிகையிலும் இது வியக்த்தமாகிற தென்கிறார். அது எம்மட்டில் செல்லுகிறதென்று பார்ப்போம். அங்கே இப்படியொரு வாக்ய மிருக்கின்றது. "ஜ்ஞாதத்ருத்வஞ்ச ப4வதி யதா2 ப3யோ: பாந்த2யோ: வித்ருஷீ விஹங்கஹந்த்ருத்வே வித்ருஷ்ணத்ருஷீஶ்ரேயந தஜ்ஞாபேக்ஷேபி கஸ்யசித்ப்ரவ்ருத்தி: கஸ்யசித் ஸாவயப்ரவ்ருத்திஶ்ச தயோரேவ ஹேதுய ப4வதி தத்ஶிக்ஷாவி

ஸவுஜீவாநாம் ஸாகோநெந்ந விஜ்கிவுவுத்திஶக்ஷ்ரா: கரணகலெ வராலிவவஸிகாரஞாஹஸ்ர வ வரகோதாயீநகவாக கதுஙுகவகோத்ரும் வராயத்தம் விஶெஷகதுஙுகவஞ வரா நுஜதிஸாவெகூகவாக வரா யத்தழ,'' ப்ரவசந கர்த்தாவுக்கு இவ்வாக்யத்தில்தான் குறிப்பு. இதன் ஹார்த்தமான அபிப்ராயத்தை முந்துற யாம் கூறுகின்ரேம். இவ்வதிகரணத்தில் ஜீவர்களுடைய கர்த்ருத்வம் இவர்களுக்கு ஸ்வாதீநமா பரமாத்மாதீநமா வென்று விசாரணை துவக்கிக்கொண்டு, தக்க ப்ரமாணங்களின் வாயிலாக பரமாத்மாதீநந்தான் என்று முடிவு கூறப்பட்டது. இதன்மேல் ‘இப்படியாயின், விதி நிஷேத சாஸ்த்ரங்கள் வ்யர்த்தமாய்விடுமே! எல்லாக் கர்மங்களையும் ஈஶ்வரனே செய்துவைக்கிறது உண்மையானல், நல்ல கார்யத்தை மாத்ரம் செய்துவைக்கலாமே! கர்ம பலத்தை ஜீவர்கள்தான் அடைகிறதென்கிற வ்யவஸ்தையும் குலேந்துபோமே!’ என்கிற கேள்விகள் எழலாயின. இவற்றுக்கு ஸ்ரீ பாஷ்யத்தில் ஸாதித்திருக்கிற ஸமாதாநத்தின் பரம தாத்பர்யத்தை ‘வஊதஉுக்ஷும் ஹவதி’ என்ருரம்பித்து ஶ்ருத ப்ரகாசிகை விசதீகரிக்கின்றது. இதன் ஸமுதிதார்த்த மென்னவென்ருல் :

ஜீவர்களுக்குப் பொதுவாகப் பொருட்களை உணர்வதற்கும் தொழில் செய்வதற்குமான ஆற்றலை ஈசன்தான் அருளியிருக்கின்ருன். இன்றேல் அறியவோ செய்யவோ இவர்களால் எதுவுமாகாது. இதுமாத்ர மல்ல இந்த சித்சக்தி க்ரியாசக்திகளைக் கொண்டு ப்ரவ்ருத்திப்பதற்கு உற்ற கருவிகளான கரண களேபரங்களை இவர்கள் அடைந்திருப்பதும் அவனுல்தான். இப்படி ஜீவர்கள் இவற்றுக் கெல்லாம் ஈசன் முகம் பார்க்கவேண்டியவர்களா யிருப்பதால், ஜீவருக்குள்ள கர்த்ருத்வம் பொதுவாகப் பராயத்த மெனப்படுகிறது. ஆனல் இப்படி ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வராபேக்ஷை யிருந்தாலும், ஏற்கனவே கொடுத்து உதவியிருக்கிற உபகரணங்களை வைத்துக்கொண்டு த்விதீயாதி ப்ரவ்ருத்திகளை இவர்கள் தாமாகவே செய்துகொள்ளலாமே. அப்போது த்விதீயாதி காரியங்களிலுள்ள கர்த்ருத்வம் இவர்களுக்கு ஸ்வாயத்தமாகாதோ வெனில்: ஆகாது. அங்கும் அவன்தான் அநுமதி அளிக்கவேண்டும். அதன்றி ஒரு கார்யமும் நடப்பதற்கு வழியில்லை. “உத்தாவுவுத்திரெத ஒநுஜதிஶாநெநமெநவொவவஶ்ரெத'' என்கிருரன்ரே! ஆதலால் விசேஷ கர்த்ருத்வம் ஸாமாந்ய கர்த்ருத்வம் என்கிற வாசியற ஜீவருடையதான கர்த்ருத்வம் யாவற்றும் பரமாத்மாதீநந்தான். ஆனலும் ஈஶ்வரன் கொடுத்த ஸாதநங்களை வைத்துக்கொண்டு செய்கிறது ஜீவர்களேயாதலால், விதி நிஷேத சாஸ்த்ரங்கள் வ்யர்த்தங்களாகமாட்டா.

ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகளுண்டு. இருவருக்கும் தகப்பன் ஸ்வார்ஜிதமான ஸொத்தைப் பகிர்ந்து கொடுக்கிருன். இம்மட்டில் அவர்கள் தகப்பன் முகம் பார்த்திருப்பவர்கள்தான். என்ருலும் அவர்கள் தாம் எக்கார்யம் செய்வதானுலும் அரசாங்கத்துச் சட்ட திட்டங்களை அநுஸரித்தே செய்யவேண்டும். ஒருவன் நல்லது செய்கிருன். அதன் பயன் அவனுடையதுதான். கெட்டதைச் செய்தான். அதன் பலத்தை அவன்தான் அநுபவித்தாகவேண்டும். கார்யம் செய்வதற்குத் தகப்பன் கொடுத்த த்ரவ்யந்தான் உதவுகிற தென்ருலும், நல்லதையோ அல்லாததையோ ஸ்வயமாகச் செய்வதற்கு அவர்கள் உரிமை பெற்றிருக்கிருர்கள். இந்த ஸவாதந்த்ர்யமும் ஸொத்தைக் கொடுக்கும்போதே தகப்பனல் சேர்த்துக் கொடுக்கப்பட்டதுதான். அதுபோல ஜீவர்களுடைய கர்த்ருத்வ ஸாமாந்யம் பராயத்தமே யானுலும், ஈசன் அவர்களுக்குக் கரண களேபராதிகளோடுகூடத் தாமாகவே ஒன்றைச் செய்வதற்கான ஸ்வாதந்த்ர்யத்தையும் அளித்திருக்கின்றமையால், விதி நிஷேத சாஸ்த்ரங்கள் பழுதுபடா. கர்ம பலங்களும் ஜீவர்களைச் சாராமலிரா. இப்போது இடைக் கேள்விக்கோ

இடமேயில்லை. இதுதான் இவ்வாக்யங்களின் ஸமுதிதார்த்தம். இதைப் பொருள் வாயிலாகக் குறித்துவிட்டு நம் ப்ரவசந கர்த்தா 'இது ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் பகவானுக்கு ஸாமாந்ய கர்த்ருத்வம் உண்டென்பதை த்ருடப்படுத்துகிற தென்கிறார்.

உதாஹரித்த வாக்யங்களினால் ஸாமாந்யமாகவோ விசேஷித்தோ உள்ளதான ஜீவ கத கர்த்ருத்வ மெல்லாம் பரமாத்மாதீநந்தா னென்று சொல்லியதாகுமே யன்றி, இக் கர்த்ருத்வ மொன்றையும் ஈஶ்வரன்மீது சுமத்தியதாகாது. அது செய்யவும் முடியாது; அதிகரண க்ருத்யமும் அதுவன்று. சேதநருக்குள்ள கர்த்ருத்வம் யாவும் பராயத்த மென்பதுதான் அதிகரண ப்ரமேயம். இவ்வளவைக்கொண்டு சேதந க்ரியையில் பரமாத்மாவைக் கர்த்தாவென்றுகூடச் சொல்லிவிட லாகுமா! ஆகுமென்றால், மகனுடைய துஷ்க்ருத்யங்களில் தகப்பனைக் கர்த்தா வென்றும், அது கொண்டு அவனைத் தண்டிக்கவேண்டுமென்றுகூடச் சொல்லலாம்போலும். பராயத்த மென்பதற்கும் பரகத மென்பதற்கும் மலையளவு வாசியுண்டே. இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் ஜீவன் செய்கிற கார்யத்தில் ஈஶ்வரனைக் கர்த்தாவென்னும் பக்ஷத்தில் கர்ம பலத்திற்கு அவனைப் போக்த்தா வென்பதற்கும் இசையவேண்டியதாகுமே! இல்லை: நாம் சொல்வது கர்த்ருத்வமாத்ரந்தான், போக்த்ருத்வ மல்லவெனில்: ப்ரதாநத்திற்குக் கர்த்ருத்வத்தைச் சொல்கின்றவரான ஸாங்க்யர் ஜயமடைந்தார். "ஹொக்ஷுகவஹெதாஹெதம் கதூகம் ஹொக்ஷ: ஜீவஸெவ" இத்யாதி ஸ்ரீஸூக்திகளும் விரோதிக்கும். "ஶாஸ்ஹூமவ வூயொக்ஷநி" என்கிற வ்யவஸ்தையும் குலைந்துபோகும்.

ஆனால் ஈஶ்வரனுக்கு ஜீவக்ரியைகளில் கர்த்ருத்வமே கிடையாதா? "அஊ: வூவிஷ ஸாஸா ஜநாநாம் ஸவாதா, ய ஆதா நஜெஷரொயயதி" இத்யாதி ஶ்ருதிகளும் இவற்றைப் பின்பற்றிப் பிறந்த ஸ்ம்ருதிகளும் ஜீவன் ஈஶ்வர ப்ரேரணையின்மீதே நினைப்பது இமைப்பது முதலான எல்லாக் கார்யங்களையும் செய்கின்றானென்று அழுத்தமாய் உத்கோஷிக்கின்றனவே; 'தம்விநாதூணாமவி நவதி' 'அவனன்றி ஓரணுவு மசையாது' என்பதுபோன்ற முதுமொழிகளும் பல வுள்ளனவே. "வெஉிகீ ஹி வாஸி: ஶரீரெநியவூாணஜீவாதொவகரணம் வரொதா நவெகதாரவெயாரயதி" 'வேத வழியிற் கிடைத்த நல்லறிவானது, உடல் பொறி உயிர் ஜீவன் இவற்றையெல்லாம் தனக்குப் பரிகரமாய்க்கொண்டு விளங்கும் பரமாத்மாவையே கர்த்தாவென்று வெட்டிக் காட்டுகின்றது' என்கிற கீதா பாஷ்ய வாக்யமொன்று இவற்றுக்கெல்லாம் தலையாய் விளங்குகின்றதே. இவைகளோடெல்லாம் விரோதம் வாராதோவெனில்: கேட்பது ந்யாயந்தான். பதிலையுங் கேளுங்கள். கர்த்ருத்வ மென்பது, ப்ரயோஜக கர்த்ருத்வம் ப்ரயோஜ்ய கர்த்ருத்வம் என்று இருவகையா யிருக்கின்றது. இவற்றுள் ஈஶ்வரனுக்கு ப்ரயோஜக கர்த்ருத்வம் அஸாதாரணமா யுள்ளதுதான். ஆனாலும் அவனருளால் ஆற்றல் வாய்ந்துள்ளவரான ஜீவருக்கும் ப்ரயோஜ்ய கர்த்ருத்வ மில்லாமலில்லை. ஈஶ்வரனுக்குள்ள ப்ரயோஜக கர்த்ருத்வம் 'அஊ:வூவிஷ ஸாஸாஜநாநாழ' என்பது முதலான ப்ரமாணங்களினால் ப்ரதிபந்நமான ஸர்வ நியந்த்ருத்வ ரூபம். இது இறைவனுக்கு நித்யஸித்தம். ஜீவர்களுக்குள்ள ப்ரயோஜ்ய கர்த்ருத்வமோவெனில், ஈசன் அதைவிட அத்யந்த நிஹீநமான சரீரேந்த்ரியாதி ப்ரேரக ப்ரயத்நாஶ்ரயத்வரூபம். இப்படிப்பட்ட கர்த்ருத்வந்தான் 'கதாஶாஸூாயவூவகாஜ' என்கிற ஸூத்ர தத்பாஷ்யாதிகளால் ஜீவன்மாட்டு ஸாதிக்கப்படுகிறது. இதற்குத் தான்பராயத்தாதிகரணத்தில் பரமாத்மாதீநத்வம் சொல்லப்படுகிறது. க்ருத ப்ரயத்நாபேக்ஷ ஸூத்ரத்தில் செய்யப்படுகிற சங்கா ஸமாதாநங்களும் இதைப்பற்றி யெழுந்து மறைகின்றவைதான். ஆதலால் இத்தகைய கர்த்ருத்வம் ஈஶ்வரனுக்குக் கிடையா

தென்று சொன்னேமேயன்றி, கர்த்ருத்வமே கிடையாதென்று சொல்லவில்லை; ஆதலால் உதாஹ்ருத ப்ரமாணங்களோடு விரோத லேசமுமில்லை.

ஆனல் ப்ரவசந கர்த்தா "ஸாமாந்யேந ஸஹ ஜீவாநாம் விஜ்ஞாநபூர்வப்ரவ்ருத்திஶக்த்யோ: கரணகளேபராதிப்ரதாநாயத்தத்வாச்ச பராதீநஸ்யாஸ்ய கர்த்ருத்வஸாமாந்யம் பராயத்தம் விஶேஷ கர்த்ருத்வஞ்ச பராநுமதிஸாபேக்ஷத்வாத் பராயத்தம்" என்கிற வாக்யத்தைக்கொண்டு, இது ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் பகவானுக்கு ஸாமாந்ய கர்த்ருத்வம் உண்டென்பதை த்ருடப்படுத்துகிறதென்கிறார். இங்கே ஸமாந்யம் விசேஷம் என்று பிரிவுபடுத்திக் கூறுவதெல்லாம் ஜீவகத கர்த்ருத்வத்தையேயன்றி, ஈசனுக்குள்ள ஸர்வ நியத்ருத்வரூபமான ப்ரயோஜக கர்த்ருத்வத்தை யல்ல. அதிலும் ஸாமாந்யத: கர்த்ருத்வதம் ஸித்திப்பதற்கு வேண்டிய உபகரண ப்ரதாநாதிகளை ஈசனே செய்யவேண்டி யிருப்பதால், அவ்வகையில் அது பரமாத்மாதீ நமாகிறது. விசேஷ கர்த்ருத்வமோவெனில்: இதற்குற்ற அநுமதி ப்ரதாநாதிகளை ஈசனே செய்யவேண்டியிருப்பதால், அவ்வகையில் இது பராயத்தமாகிறது. இது இவ்வாக்யத்திற்குள்ள பொருளாயிருக்க, ப்ரவசந கர்த்தா இதை ஈஶ்வரகத கர்த்ருத்வ பரமாகக்கொண்டு, அதற்குமேல் அதை ஸாமாந்ய விசேஷ என்று துண்டுபோட்டுத் தம் மனம் போனபடியெல்லாம் பொருள்கூறத் தலைப்பட்டால், அதைத் தடுப்பதற்கு யாம் அதிகாரிக ளல்லோம். உள்ள அநுபபத்திகளை மட்டும் எடுத்துரைத்தோ மத்துணையே. மேலே செல்வோம். இதற்கு அநுபதம் ஸ்ரீதேசிகனுடைய அபிப்ராயம் இதுவே என்று விட்டு, அதிகரண ஸாராவளி ந்யாய ஸித்தாஞ்ஜந ஸூக்திகள் சிலவற்றைக் காட்டி, 'இவ்வாக்யங்களால் ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸாமாந்ய காரணத்வமே சொல்லப்பட்டிருக்கின்றது தெரிகிறது' என்கின்றார். தெரியட்டும். அதை யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. காரயித்ருத்வத்தைப் பற்றித்தான் விவாதம். அது ஸாமாந்ய காரணத்வத்தைவிட வேறானது. நம் ப்ரவசந கர்த்தா இரண்டையும் ஒன்றாக நினைத்திருக்கிறார்போலும். அப்படி இவர் மலைப்பதற்கு ந்யாய ஸித்தாஞ்ஜந மூலத்தில் ஒன்றுமில்லை. ஆனல் ரங்கராமாநுஜீய வ்யாக்யாநம் சற்று இடங்கொடுக்கிறது. "போக்த்ருத்வேந ஹேதுமத்தம் கர்த்ருத்வம் போக்துர்ஜீவஸ்யைவ தச்ச ஸாமாந்யத: பரமாத்மஹேதுகம்" என்பது அங்குள்ள மூல பங்க்தி. பயிரிட்டவன் நெல் அறுக்கிறானென்பதுபோல, போகத்துக்குக் காரணமான கர்த்ருத்வமும் புஜிக்கின்ற ஜீவரைச் சார்ந்ததே. அது பொதுவாக பரமபுருஷனாலாகியது என்பது இதன் பொருள். இதற்கு "ஸாமாந்யத இதி கார்யமாத்ரவிஷய ஸாதாரணதயா காரயித்ருத்வமிதி பாவ: |" என்று ரங்கராமாநுஜீயம். இதில் காரயித்ருத்வம் என்கிற பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இதை இந்த ஸ்வாமி அபிமத ஸாதகமாக நினைத்திருக்கிறார். அது தவறென்பதை நிரூபிப்பதற்குமுன், இந்த மூலவாக்ய விஷயமான வ்யாக்யாநாந்தரத்தின் அபிப்ராயத்தையும் அறிந்துகொள்வது நலமாதலால், அதன் ரீதியையும் பராமர்சிக்கவேண்டியது ப்ராப்தமாகிறது. ஆகையால் இரண்டு வ்யாக்யாந பங்க்திகளையும் முந்துறத் தனித்தனியே காட்டுகின்றோம்.

"ஸாமாந்யத இதி, ஸாதாரண்யேந த்ருஷ்டய: | ததா ச ஸர்வேஷாமபி கர்த்ருத்வம் பரமாத்மாயத்தமிதி பாவ: | யத்வா ஸாமாந்யத இதி, கார்யமாத்ரவிஷய ஸாதாரணதயா காரயித்ருத்வமிதி பாவ: | ததஶ்ச யதீஶ்வர ஏவ ஸர்வஸாதாரணகாரயிதா ததா ஜீவஸ்ய ஸாம ஹம்ஜிகார்ஹணீயதயா விதிநிஷேதஶாஸ்த்ராணாமநர்த்தக்யமிதி ஶங்கா பராஸ்தா | தஸ்ய கார்யமாத்ரவிஷய ஸாதாரணகாரணத்வேந உக்த தோஷாநவகாஶாத் | இதி. [ரங்கராமாநுஜீயம்]

ஸாமாந்யத இதி காலாத்ருஷ்டாதிவத் பரமபுருஷஸ்ய ஜீவகத கர்த்ருத்வம் ப்ரதி ஸாதாரணகாரணத்வமித்யர்த: । அநேந கர்த்ருத்வஸ்ய பரமபுருஷஹேதுகத்வே பாபஸ்ய தத3ைநவகாஶிதஸ்வாதந்த்ர்யஸ்ய ஈஶ்வரஸ்யாநௌசித்யமிதி ஶங்கா பராஸ்தா காலாத்ருஷ்டாதிவத் ஸாதாரணகாரணத்வேந தது3பபத்தே: । அஸாதாரணகாரணத்வ ஏவ ப்ரயோஜகதயா வ்யவஹாராதிதி । [ரத்நபேடிகா]

இனி: இவற்றுக்குள்ள அர்த்த விசேஷங்களை ஆராய்வோம். மூல வாக்யத்திலுள்ள 'ஸாமாந்யத:' என்கிற பதத்தை இரண்டு வ்யாக்யானங்களு மெடுத்துக் கொண்டன. ராமாநுஜீயம் பொதுவாக என்பதற்கு, 'எல்லா ஜீவர்களுக்கும் பொதுவாக' என்று முதலில் பொருள்கூறிவிட்டு, அல்லது என்றாரம்பித்து, காலா த்ருஷ்டாதிகளுக்குப் போலே பொதுவான காரயித்ருவமென்று அபிப்ராயம்' என்று மறுதரம் வ்யாக்கியானித்தது. முதலிற் சொன்ன ரீதியில் ஸ்புடமான ப்ரயோஜநமில்லையென்று நினைத்தது போலும். இரண்டாவது சொல்லிய ரீதியில் காலா த்ருஷ்டாதிகளைப் போலவென்று த்ருஷ்டாந்தத்தைக் காட்டிவிட்டு, மேலே ஸாதாரணமான காரயித்ருத்வ மென்று பொருளுரைக்கிறது. காலா த்ருஷ்டாதிகளுக்குக் கார்யங்களைக் குறித்து ஸாதாரண காரணத்வம் உண்டானாலும் அவற்றை காரயிதாக்களென்று எவரும் சொல்வதில்லை. அப்படியிருக்க: இது ஏன் காரயித்ருத்வம் என்கிற தென்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிந்திக்கையில் ஏற்படுவதென்ன? ஸாதாரண காரணத்வத்தைத்தான் இவ்விடத்தில் காரயித்ருத்வ மென்று சொல்லியதாக ஏற்படுகிறது. இன்றேல் திருஷ்டாந்தம் பொருந்ாதன்றோ! இனி எதற்காக அப்படிச் சொல்லவேண்டுமென்று ஆலோசிக்கவேண்டும். இதன் முடிவுக்கு மூலவாக்யத்தில் 'தத்து ஸாமாந்யத: பரம புருஷஹேதுகம்'' என்கிற பாகம் எதற்காக வரையப்பட்டிருக்கிறதென்று தெரிவது அநுகூலமாயிருக்கும்.

அங்கு ஜீவகத கர்த்ருத்வ மெல்லாம் பரமபுருஷாதீந மென்று ஸாதிக்க வேண்டும். அதற்கு " தத்து பரமபுருஷஹேதுகம் " என்றாலே போதும்; 'ஸாமாந்யத:' என்கிற பதம் வேண்டியதில்லை. ஆனால் இங்கே தோன்றக்கூடிய தடஸ்த்த சங்கை யொன்றைப் போக்குவதற்காக அது ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. யாது சங்கை யெனில் ஜீவர்களுக்குள்ள கர்த்ருத்வம் பரமபுருஷாதீந மென்றது ப்ராமாணிகம்தான். "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி, ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி'' என்று உபநிஷத்துக்கள் உத்கோஷிக்கின்றனவன்றோ! ஆனால் இப்படி கர்த்ருத்வம் ஈஶ்வராதீநமானால் ஜீவர்களைப்பற்றிய விதி நிஷேத சாஸ்த்ரங்கள் வ்யர்த்தங்களாகாவோ! இது சங்கை. இதனைப் போக்குவதற்கு "ஸாமாந்யத:'' என்று சொல்லலாயிற்று. இதனால் ஜீவக்ரியைகளில் ஈஶ்வரன் காலா தருஷ்டாதிகளைப்போல பொதுக் காரணந்தான். விசேஷ காரணத்வமோ வெனில்: ஜீவர்களுக்கே யுள்ளதாதலின் குறித்த சங்கைக்கு இடமில்லை யென்று ஸமாதாநம் சொல்லியதாயிற்று. இங்கே சங்கித்தவர் காரயதி, காரயதி, என்கிற ஶ்ருதி ஸ்வாரஸ்யத்தால் கர்த்ருத்வம் பராதீந மென்பதை ஒப்புக்கொண்டு மேலே சங்கித்தார். ஸமாதாநம் பண்ணுகிற வ்யாக்யாதாவுக்கோ வெனில் : காரயித்ருத்வ ஶ்ருதி வ்யக்தி விசேஷ விஷயமென்று ஹார்த்தமான அபிப்ராயம். ஆனால் அதைச் சொல்லி வ்யவஹாரத்தை வளர விடுவதற்கு மனமில்லாமல் ஈசுவரனுக்குள்ளது ஸாதாரண காரணத்வம்தான் என்று சொல்லி ப்ருக்ருத சங்கையைப் பரிஹரிப்பார் வேண்டிச் சங்கித்தவர் காரயிதா வென்கிற சொல்லையே

நினைத்துக்கொண்டிருப்பதால், ஸ்ம்ருத்யாரூடமான அந்தப் பதத்தோடு 'ஸாதாரண' என்பதைக் கூட்டி 'ஸாதாரணதயா காரயித்ருத்வம்' என்றார். ஸாதாரணதயா வென்பதைக் கூட்டியதுகொண்டே காரயித்ருத்வ மென்கிறது உண்மைக் காரயித்ருத்வ மல்ல; காரணத்வ மாத்ரந்தானென்று ஸூசிக்கப்பட்டதாய் விடுகிறது. இந்த முறையை ஶாஸ்த்ரீய வ்யவஹாரங்களில் ஸஹஜமாகக் கையாளுவதுண்டு. "ஸ்தாணௌ புருஷ:" இருவர் வழி நடக்கையில் ஒருவர் தொலையிலுள்ளதொரு கட்டையைப் பார்த்து 'அதோ எதிரே ஆள்' என்றார். மற்றவருக்கு அது ஆளல்ல வென்பது தெரியும். ஆனாலும் மறுமொழி கூறாமலே சற்று நெருங்கிச் சென்று "இதோ பாரும் இந்தக் கட்டைதான் உமது ஆள்' என்றார். ஆனால் அவர் ஆளென்று சொல்லுகிறா ராலும் ஆளென்றதை ஒப்புக்கொண்டு விடவில்லை. 'ஆளாக உமக்குத் தோன்றியது ஆளல்ல; கட்டைதான்' என்றே வற்புறுத்துகிறார். அதுபோல இங்கும் 'ஸாதாரணதயா' என்பதைக் கூட்டியிருப்பதானது, காரயித்ருத்வ மென்று நீர் நினைத்துப் பேசுவது காரயித்ருத்வமல்ல; ஸாதாரண காரணத்வந்தான் என்பதும் காரயித்ருத்வ ஶ்ருதி வ்யக்தி விசேஷ விஷய மென்பதும் அறிவுறுத்தப்படலாகும். இப்படியில்தான் காலாத்ருஷ்டாதிகளை த்ருஷ்டாந்தமாகக் காட்டியது பொருந்தும். காலா த்ருஷ்டாதிகளைப்போலே ஸாதாரண காரணமா யிருப்பதால் குறித்த குறைக்கு இடமில்லையென்று மேலே இவர்தாமே ஸமாதானம் கூறுவதும் பொருந்தும். காரயித்ருத்வ மென்பதை உள்ளபடி கொள்ளாமல் கீழ்க்காட்டியபடி ஒரு விசேஷாபிப்ராயத்தை யுட்கொண்டே ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற தென்பதைத் தெரிவிப்பதற்கே வ்யாக்யாதா "காரயித்ருத்வஶக்திர்ஹாவ:।". என்று 'ஹாவ' சப்தத்தை ப்ரயோகித்தார்போலும். காரயித்ருத்வமென்கிற பதமன்றியிலிருக்கிற வ்யாக்யாநாந்தரத்தில் "ஸாதாரண காரயித்ருத்வஶக்த்யபிப்ராய:।" என்று ஹாவ பத ஸ்தாநத்தில் அர்த்த பதம் ப்ரயுக்த்தமாயிருப்பதை வாசக நண்பர்கள் கவனிக்கவேண்டும். ஸாதாரண காரணத்வ மென்று வெட்ட வெளியாகச் சுட்டிக் காட்டிவிட்ட பிறகு ஆங்கொரு ஹாவமும் வர்ணிக்க வேண்டியதில்லை. மறை பொருளாகக் காரயித்ருத்வ மென்றால்தானே அது செய்யவேண்டும். காரணத்வ மென்ன வேண்டிய விடத்தில் காரயித்ருத்வ மென்று தாம் சொல்லியது சங்கிப்பவர் "ஏஷ ஹ்யேவ ஸாதுகர்ம காரயதி" இத்யாதி ஶ்ருதியிற் சொல்லுங் காரயித்ருத்வத்வதை நினைவிற் கொண்டிருப்பதை அநுஸரித்தென்கிற விசேஷத்தை வ்யாக்யாதா "ததஸ்ய யதீஶ்வரவசவ ஸாத்வஸாதுகர்ம காரயிதா" என்கிற சங்காபிலாபக வசந ரசனையினாலே ஸூசிக்கின்றார் போலும். இன்னும் ப்ரஸ்தாவத்திலுள்ள காரணத்வம் ஸர்வஜ்ஞ சேதநன் பக்கலுள்ள தாகையினால் இதைக் காரயித்ருத்வமென்று உபசாரமாகவும் சொல்லியிருக்கலாம். இன்னும் ஏதேனும் இருக்கலாம். புத்திமான்கள் உசிதப்படி ஊஹித்துக்கொள்க.

ஆனதினால்தான் ராமாநுஜீயத்தில் ஸாதாரண தயா காரயித்ருத்வ மென்றிருப்பதை ரத்நபேடிகை, ஸந்தேஹத்திற் கிடமில்லாமல் ஸாதாரண காரணத்வமென்று திருத்திக் கூறி யிருக்கிறது. மேலும் ராமாநுஜீயத்தில் "ஈஶ்வரனே காரயிதாவாயின் ஜீவன் பொம்மையோடு ஒப்பாதலின், விதி நிஷேத சாஸ்த்ரம் வீணாகு மென்று சங்கையின் ஆகாரங் காட்டியிருப்பதைப் போலன்றி ரத்ந பேடிகை "கர்த்ருத்வம் பரமபுருஷ ஹேதுகமா யிருப்பின் பாப மென்பது அவனாலேயே செய்விக்கப்பட்டதாகு மாதலால், ஈசனுக்குத் தண்டதரத்வம் அநுசிதமாகு மென்று வேறுவிதமாய் சங்கா ஸ்வரூபம் நிர்த்தேசிக்கப்படுகிறது. இங்கொரு விசேஷம் கவனிக்கத்தக்கது. பாபம் ஈசனால் (காரிதம்) செய்விக்கப்பட்ட தாகுமானால், ஈசன் பாபத்திற்கு (காரயிதா), செய்விப்பவனாவான். பாபம் ஈஶ்வர காரிதமாகு மென்று

இங்கு ஆபத்தி செய்யப்படுகிறது. ஆபத்தி யென்பது இல்லாத குறையைச் சுமத்துவ தென்பது ப்ரஸித்தம். எனவே இவ்வாபத்தி பண்ணியதைக்கொண்டே பாபம் ஈஶ்வர காரித மல்ல வென்பது தெளிவுறுகிறது. இனி இதனாலேயே ஈஶ்வரன் காரயிதாவல்ல வென்றும் ஸ்பஷ்டமாய் ஏற்பட்டு வருகிறது. ஆதலால் ரத்ந பேடிகை காரயித்ருத்வத்தைச் சொல்லவில்லை யென்பதோடு மட்டும் நிற்காமல், அதில்லை யென்றுகூட நிர்த்தாரணம் செய்து கொடுக்கிறது பாருங்கள்! இதன் விளைவாக மேலே ஈஶ்வரனுக்குத் தண்டதரத்வம் அநுசித மாகுமெனப்படுவதால் இது அநிஷ்டமான ஆபத்தியேயன்றி இஷ்டாபத்தி யாகாதென்பதும் விசதம். சங்கைக்கு ஸமாதாநங் கூறுமிடத்தில், "ஈசன் காலாத்ருஷ்டாதிகளைப் போன்ற ஸாதாரண காரணமே யாதலால் குறித்த குறைக்கு இடமில்லை" என்று ரங்கராமாநுஜீயமே தான் முன் ஸாதாரண காரயித்ருத்வமென்று சொல்லியதை ஸாதாரண காரணத்வமென்று திருத்திக்கொண் டிருக்கிறதென்பதும் உற்று நோக்குங்கால் விளங்காமற் போகாது. ரத்நபேடிகையிலோ வெனில்: பாபங்களைப்பற்றி ஈஶ்வரன் காரயிதாவென் றேற்படுமாதலால், அவனுக்குத் தண்டதரத்வம் சொல்வது அநுசித மாகுமென்று சங்கை; காலாத்ருஷ்டாதிகளைப்போல ஸாதாரண காரணமேயாதலால் அதற்கு இடமில்லையென்று ஸமாதாநம். எதற்கு இடமில்லை? காரயித்ருத்வா பத்திக்கு இடமில்லை. இதனால் முக்த கண்டமாக ஈஶ்வரனுக்குக் காராயித்ருத்வ மில்லை யென்று சொல்லியதாக வில்லையா?

அதற்கிடமில்லை யென்பதற்குத் தண்டதரத்வம் அநுசித மென்கிற சங்கைக்கு இடமில்லையென்று பொருள் கொண்டுவிட்டால் காரயித்ருத்வமில்லை யென்றது கண்டோக்த மாகாதே என்றாலோ, இதில் உங்களுக்கு ஒன்றும் பயனில்லை. ஆயினும் இப்படிப் பொருள்கொள்ள முடியா தென்பதையும் நிரூபிக்கிறோம்.

மேலே 'அஸாதாரண காரணமா யிருப்பதைத்தான் உலகத்தில் அப்படி வழங்குகிறார்கள்' என்றொரு வாக்ய மிருக்கிறதன்றோ? அதில் அப்படி. எப்படி? காரயிதாவென்று. இது பொருந்துமே யல்லது நீங்கள் நினைக்கும் தண்டதரத்வா நௌசித்யம் முதலிய வேறொன்றும் இந்தத் தயாவோடு இணங்காது. இது வாக்யார்த்த விசாரண குசலர்களுக்கு ஸுவிஶதம். ஆகவே, காரயிதாவாயின் தண்டிப்பது உசிதமாகாதே யென்பது கேள்வி. காரயிதாவல்ல வாதலின் உசிதப் பிசகில்லை யென்று பதில். பட்டுக் கத்தரித்தாற் போல ப்ரஶ்ந ப்ரதிவசநங்கள் ரத்ந பேடிகையில் பிச்சல் பிசிலன்றி சதுரஸ்ரமாய்த் திகழ்கின்றன.

ரங்கராமாநுஜீயத்திலும், காரயிதாவாயின் இன்ன குறை வருமே யென்ற கேள்விக்குக் காரயிதாதான் ஆனாலுங் குறைகூற முடியாதென்று பளிச்சென்று பதிற் கூறாமல் காலாதிகளைப்போல அவனுக்கு ஸாதாரண காரயித்ருத்வ மென்று ம்ருதுவாய்ப் பேசுவதற்கு ஆரம்பித்து ஸாதாரண பதத்தைக் கூட்டி காரயித்ரு பதத்தின் அர்த்த வேகத்தைத் தணித்து மேலே ஸாதாரண காரணத்வ மென்றதால் அதனை விளக்கி சங்கிப்பவரை ஸுலபமாகத் தன்னோடு இணைத்துக்கொள்ள வேண்டு மென்பது அந்த க்ரந்தத்தின் தாத்பர்ய மென்பதும் கண்டறியக் கூடியதுதான். ஆகவே உதாஹ்ருதங்களான ஶ்ருதப்ரகாசிகா ஸ்ரீ ஸூக்திகளும் தேசிகஸ்ரீ ஸூக்தி தத் வ்யாக்யாநங்களும் ப்ரவசந கர்த்தாவுக்கு அபிமதமான அர்த்தத்தைச் சற்றுங் கடாக்ஷிக்கவில்லையா யிருக்க, இந்த ஸ்வாமி ஸ்வாபிமதத்தை, ஸாதித்துக்கொடுக்க இவைகளை அழைப்பதனால் ஏதேனும் பயன் கிடைக்குமா? [தொடரும்.]

ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

கடிதங்கள்

—

(1)

ஸ்ரீ. ந்ருஸிம்ஹப்ரியா ஸம்பாதகருக்கு:

சென்ற மாதத்து ந்ருஸிம்ஹ ப்ரியாவில் வெளிவந்த ஈசாவாஸ்யோபநிஷத்தின் உரையில் (30, 31, பக்கங்களில்) "**भूयिष्ठां ते नमउक्तिं विधेम**" [பூயிஷ்டாம் தே நமஉக்திம் விதேம] என்கிற பாதத்திற்கு "அளவற்ற நமஸ்காரோக்தியை உனக்குச் செய்வோமாக" என்று பொருள் விவரிக்கப்பட்டிருப்பதைக் கண்ட அடியேன் இதற்கு நம்பிள்ளை போல்வாரான பூர்வாசார்யர்கள் ரஸவத்தரமாக அருளிச்செய்திருக்கும் அர்த்தத்தை யெடுத்துரைத்து ரஸிக வித்வான்களை உகப்பிக்கலாமென்றெண்ணி எழுதுகின்றேன்.

இந்த ருக்கின் ஆரம்பம் "**अग्ने नय सुपथा राये अस्मान्**" என்பது. ஆகவே, அக்நிதேவதையை நோக்கிச் சொல்வதுபோல் தோன்றினும் உண்மையில் பரமபுருஷனே இங்கு விஷயமாவன். அக்நே! என்றது அக்நிக்கு அந்தர்யாமியானவனே! என்றபடி. **अग्रं नयतीति अग्निः** என்கிற வ்யுத்பத்தி வழியால் ஸாக்ஷாத்தாகவே பரமபுருஷனைச் சொல்லிற்ருகவுமாம்).

இதில் "பூயிஷ்டாம் தே நமஉக்திம் விதேம" என்பதற்கு 'மிக அதிகமான நம உக்தியை உன் விஷயத்திலே செய்யக்கடவோம்' என்கிற பொருள் அஸங்கதமன்று; அது சப்த லப்யமே யாகும். "**आवृत्तितो भूयसीं नमउक्तिं विदध्महे**" என்று மஹான்களும் வியாக்யானம் செய்தருளியுள்ளார்கள். நமோநம: நமோநம: என்று பலகால் சொல்லுவதே ஆவ்ருத்தியினால் பூயிஷ்டமான நம உக்தியாகும். இங்ஙனே வியாக்யானம் செய்வதைக் காட்டிலும் எம்பெருமானுடைய தன்மைக்குப் பொருத்தமாக வியாக்கியானம் செய்தருளவேணுமென்று திருவுள்ளம்பற்றிய நம்பிள்ளை விலக்ஷணமாக வியாக்யான மருளியுள்ளார். ஆழ்வாருடைய திவ்ய ஸூக்தியும் அதற்குக் கைகொடுத்தது.

நம்பிள்ளை திருவுள்ளம்பற்றின பொருள் எங்ஙனே யென்னில்; நம: என்கிற உக்தியானது எம்பெருமானுக்குக் கனத்துத் தோற்றுவதாக அவர்கொண்ட பொருள். உள்ள சொல்வடிவில் இப்பொருள் எங்ஙனே கிடைக்கிறதென்று விமர்சிக்கவேணும். "பூயிஷ்டாம் நம உக்திம் தே விதேம" என்று அந்வயங் கொண்டால் முந்துறமுன்னம் உதாஹரித்த பொருள்கிடை‍்கின்றது. "தே பூயிஷ்டாம் நம உக்திம் விதேம" என்று அந்வயம் கொள்ளுமளவில் நம்பிள்ளை திருவுள்ளம் பற்றின விலக்ஷணப்பொருள் கிடைக்கின்றது. எங்ஙனே யென்னில். தே பூயிஷ்டாம்—உன்மனத்தால் கனத்ததான என்றபடி.

இப்பொருளை உள்ளத்தில் நன்கு பதிய வைக்கிறேம். ஸ்ரீ ராமாயணத்தில் "**अहमस्यावरो भ्राता गुणैर्दास्यमुपागतः**" என்பது இளைய பெருமாள் வாக்யம். இதற்குப் பெரும்பாலோர் சொல்லும் பொருள் யாதெனில், 'நான் இவருடைய

ஸ்ரீராமருடைய] இளைய தம்பி ; குணங்களினால் அடிமைப்பட்டிருக்கிறேன்' என்ப] தாம். நம்பிள்ளை யருளிச் செய்யும் பொருள் இங்ஙனே யன்று; திருவாய்மொழி முதற் பாசுரத்தின் ஈட்டு அவதாரிகையில் —

"* அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்ய முபாகத :* என்னுமா போலே. இளைய பெருமாளை நீர் இவர்க்கு என்னவீரென்ன, அவர், பெருமாளும் ஒருபடி நினைத்திருப்பர், நானுமொருபடி நினைத்திருப்பே னென்றார். அவர் நினைத் திருக்கும்படி என் ! நீர் நினைத்திருக்கும்படி என் ? என்ன ; அவர் தம் பின் பிறந்தவனென்றிருப்பர், நான் அவர் குணங்களுக்குத் தோற்று அடியேனா யிருப்பன் என்றாரிறே." என்றருளிச் செய்யப்பட்டுள்ளது.

"அஹமஸ்யாவரோ ப்ராதா" என்ற மூலத்திற்கு இங்ஙனம் பொருள்படுவது எங்ஙனம் ? என்று மிகப் பெரிய வித்வான்களும் திகைப்பார்கள். அஸ்ய என் பதற்கு அஸ்ய புத்த்யா—இவருடைய நினைவினால் என்று பொருள். "नैयायिकस्य वायुरप्रत्यक्षः" என்றால் நையாயிகன் கண்ணுக்கு வாயு தென்படாது என்று அர்த்தமன்றே ; நையாயிகனுடைய மதப்படிக்கு வாயு அப்ரத்யக்ஷம் என்று பொருள்படுவது ஶாஸ்த்ரஜ்ஞ கோஷ்டியில் ஸம்ப்ரதி பந்நம். அதுபோலவே 'அஸ்ய அவரோ ப்ராதா' என்றால், இவருடைய எண்ணப்படிக்கு நான் தம்பியாகிறேன் ; என்னை இவர் தம்பியாக எண்ணி யிருக்கிறார் என்பதாகப் பொருள் தேறக் குறையில்லை.

இவ்வண்ணமாகவே ப்ரக்ருத ஸ்தலத்திலும் தே பூயிஷ்டாம் என்பதற்கு 'உன் எண்ணப்படி கனத்ததான' என்று அர்த்தமாகக் குறையில்லை. அதாவது உனக்குக் கனத்துத் தோற்றும்படியான என்றதாகும். பட்டர் ஸ்ரீ குணரத்ந கோசத்தில் "அஞ்சலி ஹாரம் வஹதே" என்றருளிச் செய்கிறார். ஓர் அஞ்ஜலியை பாரமென்றதும் அதை இந்த எலியெலும்பன் சுமக்கிறானென்றதும் என்ன திரு வுள்ளத்தாலே ! என்று ஆராயவேணும். அத்தலையில் நினைவாலே இது கனத்த பாரமாகவே தோற்றுமென்று மர்மமறிந்தன்றோ பட்டர் அங்ஙனே அருளிச் செய்தது. நம்மாழ்வார் திருவாய் மொழியில் "தொழுது மாமலர் நீர் சுடர் தூபங் கொண்டு எழுது மென்னுமிது மிகை யாதலின்" என்கிற பாசுரத்தினால் ஆராதநத் தில் உத்யோக மாத்ரத்தையும் எம்பெருமான் பூயிஷ்டமாகக் கொள்ளுகிறா னென்பதை ஸ்பஷ்டமாகக் காட்டி யருளினார்.

அதுவன்றியும் * ஒழிவில் காலத் திருவாய் மொழியில் "வேங்கடத் துறை வார்க்கு நமவென்னலாங் கடமையது சுமந்தார்கட்கே" என்றருளிச் செய்கிறா ராழ்வார் நம உக்தியைச் சொன்னவர்களுக்கு என்று விவக்ஷிதமான இவ்விடத் தில் "அது சுமந்தார்கட்கே" என்று அருளிச் செய்தது ஏன் ? என்று ஆராய்ச்சி செய்தருளின நம்பிள்ளை—"இவன் பக்க லுள்ளத்தைக் கனக்க நினைத்திருக்கு மவன் கருத்தாலே" என்று அருளிச்செய்து அதற்கு ஸம்வாத ப்ரமாணமாக "பூயிஷ்டாம்" என்கிற விதனை உதாஹரித்தருளியுள்ளார். அவ்விடத்தில் உரைகாரர் "ते भूयिष्ठां नमउक्तिम्—उक्तिः नमइत्येतावन्मात्राऽपि भगवदभिप्रायेण भूयिष्ठा भवतीत्यथः" என்று விவரித்துள்ளார். முநித்ரய ஸம்ப்ரதாயத்தில் தலைவரான ஶாக்ஷாத் ஸ்வாமி என்பவரும் தம்முடைய திருவாய் மொழியுரையில் இதே யிடத் தில் இந்த ஶ்ருதி வாக்யத்தையே உதாஹரித்து இங்ஙனமே அர்த்தம் நிரூபித்துள்ளார்.

ஆசார்ய ஹ்ருதயத்தில் (202) "இருத்து மெண்டானாய்" என்கிற சூர்ணை யின் வ்யாக்யானத்தில் மணவாளமாமுனிகளும் இவ்வர்த்தத்தை யெடுத்துக் காட்டி யருளினார்.

"செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்று தேசிகனருளிச் செய்தபடியே திருவாய் மொழியோடு இணங்க ஶ்ருதிக்கு அர்த்தம் கொள்ளவேணுமானால் "தே பூயிஷ்டாம்" என்கிற அன்வயம் கொண்டு நம்பிள்ளை காட்டியருளும் பொருள் ப்ராமாணிகர்களின் திருவுள்ளத்திற்குப் பரங்காயிருக்குமென நினைக்கிறோம்.

சின்ன காஞ்சீபுரம் 14—10—42. } ஸ்ரீ காஞ்சி. ப்ரதிவாதிபயங்கர அண்ணங்கராசார்யர்.

(2)

ஸ்ரீ ந்ருசிம்ஹ ப்ரியா சம்பாதகருக்கு

ஆவணி புரட்டாசி சஞ்சிகையில் ஸ்ரீ உப. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் சுவாமிகள் சரணாகதியைப்பற்றி எழுதிய இதழில் பக்தியோகத்தைப்பற்றி அடியேனுடைய சிற்றறிவுக்குச் சில சம்சயங்கள் தோன்றுகின்றன. அவை பின்வருமாறு:—

"பக்தியோக நிஷ்டனுக்கு வ ததேஹாவஸாந மோக்ஷபலம் கிடைத்து விடுமென்பதில்லை. அவர்கள் ஏற்கெனவே செய்திருக்கும் கர்மாக்கள் ஒவ்வொன்றும் அதற்கு அநுகுணமான பலனைக் கொடுத்துமுடிந்த பிறகுதான் இந்த உபாஸனையின் பலமான மோக்ஷமுண்டாகும். இந்தமாதிரி பலன்கொடுக்க ஆரம்பித்த இந்த ஜன்மாவே பழைய கர்மாக்களின் அநுபவத்திற்கு கடைசியாயிருக்கும்பக்ஷத்தில் இதன் முடிவிலேயே மோக்ஷமுண்டு; இல்லையேல் அநேக ஜன்மங்களுக்குப் பிறகும் இருக்கலாம். அல்லது இந்த உபாஸனைக்கு நடுவிலேயே அந்தராயம் ஏற்பட்டால் கோலினபலம் இல்லாமல்போனாலும் போகட்டும்" என்பது ஸ்வாமிகளின் வியாஸம்.

பக்தியோக நிஷ்டன் பக்தியோகத்தை ஆரம்பிக்குங் காலத்தில் பகவானிடத்தில் ப்ரபத்தி பண்ணுகிறான். அதாவது என்னுடைய பக்தி ஸ்தானத்தில் நீயே இருந்து என்னுடைய 'ப்ராரப்த கர்மாக்களைத் தவிர மற்ற ஸஞ்சித கர்மாக்கள் பக்தியோகாரம்பம் வரையில் இந்த ஜன்மத்தில் செய்யப்பட்டகர்மாக்கள் இவைகளைப் போக்கி பக்தியோகத்தை பூர்த்திசெய்து ப்ராரப்த முடிவாகிய தேஹாவஸாநத்தில் மோக்ஷங்கொடுக்கவேணும்' என்று ப்ரார்த்தித்து ப்ரபத்தி பண்ணுகிறான். ஆனதால் பக்தியோக நிஷ்டனும் ப்ரபத்தி நிஷ்டனைப்போல ப்ரபன்னனாகிறானன்றோ!

உபாஸனைக்கு நடுவிலேயே ப்ராரப்த துஷ்கர்மாவினால் அந்தராயம் ஏற்பட்டால் கோரினபலம் சித்தியாதென்பது நிச்சயம். இது ஜடபரதர் சௌபரி முதலானவர்களுடைய சரித்திரத்தால் பிரசித்தம். ஆனாலும் அவர்கட்கு நடுவில் விட்டுப்போன பக்தியோகமானது நடுவில் வந்த கர்மாக்களுக்குத் தக்கபடி அநுபவித்து அதே ஜன்மத்திலேயோ அல்லது ஜன்மாந்தரங்களிலேயோ இட்ட படைகள் படையாமென யோகநிலைகூட்டி கோரின பலத்தையடைவார்கள் என்பது புராண பிரசித்தம். (என் பக்தன் கெட்டுப்போதலில்லை) என்பது கீதாசாரியன் திருவுள்ளம். ஏற்கெனவே செய்த கர்மாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஜன்மாக்கள் எடுத்து அநுபவித்து கடைசி தேஹாவஸாநத்தில் தான் கோரின பலனையடைகிறான் என்பது ஷை சுவாமிகளின் திருவுள்ளமென்பது விளங்கவில்லை. மன்னிக்கவும்.

இதன் தாத்பர்யம் மந்தமதியான அடியேனுக்கும் அடியேனைப்போன்றவர்கட்கும் புரியவில்லை. இதனை அடுத்த சஞ்சிகையில் ஷை சுவாமிகள் தெளிவாய் விவரிக்கும்படி சுவாமிகளை கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்

அடியேன் ராமானுஜதேசிக தாஸன் ந. பெருமாள் ரெட்டியார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

திருக்குடந்தை ஸ்ரீ ஆதிவண் சடகோப மகா தேசிகன் உத்ஸவம்

இந்த வருஷம் ஸ்ரீ ஆதிவண் சடகோப மகா தேசிகன் உத்ஸவத்தில் ஆறுவது உத்ஸவத்திலும், ஏழாவது உத்ஸவத்திலும் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக ஸ்ரீ தேசிகதர்சன விஜயத்வஜ ஸ்ரீ. உ.பய. வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்ரீ விசிஷ்டாத்வைத தர்சனம் ஆசார்ய மகிமை இந்த இரண்டு விஷயங்களையும் கேட்பவர்கள் உள்ளம் களிக்குமாறு எளிய நடையில் அழகாக உபந்யஸித்தது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ திருவிண்ணகரப்பன் ஸந்நிதியில் நவராத்ரி உத்ஸவத்தில் அந்த ஸ்வாமி உபந்யாஸம் ஏற்பாடு செய்திருந்தபடியால் சாத்துமுறை வரையிலும் தினந்தோறும் அந்த ஸ்வாமி உபந்யாஸங்கள் நடந்துகேட்க முடியாமல்போய்விட்டது. தேவனூர்விளாகம். லக்ஷ்மீநரஸிம்ஹதாஸ:

---

(2)

ஒப்பிலியப்பன் ஸந்நிதியில் நடைபெற்ற உபந்யாஸங்கள்

செல்வம் மல்கு குடித் திருவிண்ணகரென்றும் திருவிண்ணகர் நன்னகரே என்றும் நம்மாழ்வாராலும் திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களாலும் விசேஷமாகக் கொண்டாடப்பட்ட ஒப்பிலியப்பன் ஸந்நிதியென்கிற சிறந்த திவ்ய தேசத்தில் அடியார் குழாங்களை உஜ்ஜீவிக்கச் செய்யத் திருவுள்ளம் பற்றி, ஆதியஞ் சோதி யுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த வேத முதல்வனை ஸ்ரீ பூமி தேவீ ஸமேதனை தன்னொப்பாரில்லப்பனு (ஒப்பிலியப்பனு)க்கு நிகழும் சித்ரபாநுஷு புரட்டாசிமீ 24வ (10—10—42) சனிக்கிழமை முதல் நவராத்ரி மஹோத்ஸவம் விசேஷமாக நடைபெறுங் காலத்தில் 3, 4, 5, 6 உத்ஸவங்களில் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதி ஆஸ்தாந வித்வான் புத்தங்கோட்டகம் உபய. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி என்கிற மஹான் எழுந்தருளியிருந்து நான்கு தினங்களிலும் ஊஞ்சல் மண்டபத்தில் வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தும் திவ்ய தம்பதிகளுக்கு அபிமுகாக எழுந்தருளியிருந்து பல சிறந்த உபந்யாஸங்களை அம்ருத வர்ஷம்போல் வர்ஷித்து திவ்ய தம்பதிகளையும் கோஷ்டியில் எழுந்தருளியிருந்தவர்களையும் ஆநந்த ஸாகரத்தில் மூழ்கும்படி செய்தார். 3, 4 உத்ஸவங்களில் பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் என்று பேசப்பட்ட திவ்ய தம்பதிகளின் க்ருபைகளைப்பற்றியும் கருந்தடமுகில் வண்ணனைக் கடைக்கொண்டு கைதொழும் பக்தர்களின் கிருபையைப் பற்றியும் பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து என்று புகழப்பட்ட ஆசார்யர்களின் க்ருபையைப்பற்றியும் ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள் ஆழ்வார் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் முதலிய ப்ரமாணங்களை கொண்டு அத்யாச்சர்யமாக உபந்யாஸம் செய்தருளினர்.

5-வது உத்ஸவத்தன்று "நவிஷ்ணோ: பரமம் தத்வம் தத்பக்தேர் ந பரம் ஹிதம் | ந தத்ப்ராப்தே: பரோ மோக்ஷ இதி ஶாஸ்த்ரார்த்த நிஶ்சய:" என்று பேசப்பட்ட தத்வ ஹித புருஷார்த்தங்களின் ஸ்வரூபத்தை அநேக ப்ரமாணங்களைக் கொண்டு பரக்க உபந்யஸித்தார்.

6-வது உத்ஸவத்தன்று தைத்திரீயோபநிஷத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்ட மநுஷ்யாநந்தம் முதல் ப்ரும்ஹாநந்தம் வரையிலுள்ள ஆநந்தங்களின் தாரதம்யத்தை அதற்கு அநுகுணமான ப்ரமாணங்களைக்கொண்டு விரிவாக உபந்யஸித்தார்.

9-வது உத்ஸவத்தன்று பத்துடையடியவர்க் கெளியனை எம்பெருமான் திருவடிகளை அடைவதற்கு உபாயமான ஒன்பது விதமான பக்தியின் ஸ்வரூபத்தை ஒவ்

வொன்றையும் தெளிவாக ராமாயணம், பாரதம், கீதை, ஆழ்வார் ஸூக்தி முதலிய ப்ரமாணங்களைக்கொண்டு அழகாக உபந்யஸித்து கோஷ்டியில் செவி தாழ்த்திக் கேட்கும் பாகவதர்கள் மனமுருகி மலர்க் கண்கள் பனித்து ஆநந்தக் கூத்தாடி மகிழ்ந்து நின்றார்கள். இது ஸத்யமே, —வங்கீபுரம் - நவநீதம் - க்ருஷ்ணதாஸன்

---

(3)

திருவெவ்வுளூர் உபந்யாஸங்கள்

ஹ்ருத்தாப நாசந ஸரோவர தீர ஜாதம்
ஸம்ஸார தப்த ஜன போஷண வ்ருக்ஷராஜம் |
ஸத்பக்த வாஞ்சித பலப்ரதம் ஆச்ரிதாநாம்
ஸ்ரீவீரராகவ விபும் சரணம் ப்ரபத்யே ||

என்று புராணப்ரஸித்தமாயும் பக்திஸாரராகிய திருமழிசைபிரானும் சரண்யனிடத்தில் ஸமாச்ரயணம் செய்தருளிய திருமங்கை மன்னனும் மங்களாசாஸனமும் செய்யப்பட்ட ஸ்ரீ கிம்க்ருஹபுரீ எவ்வுள் என வழங்குகிற திருவள்ளூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் லோகோஜ்ஜீவனார்த்தம் அடியார்களைத் தாமே இருக்குமிடம் தேடி ஆட்கொள்ளும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதி ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ உபயவேதாந்த ப்ரவர்த்தகராகிய புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி 23—10—42 முதல் ஆசார்யதயை என்கிற விஷயத்தை மூன்று தினங்களில் அதிரம்யமாக உபந்யஸித்து இவ்வளவுகாலம் இத்திவ்ய தேசவாசிகள் சாதக பக்ஷிபோல் ப்ரதீக்ஷித்திருந்த ஸ்ரீ அழகியசிங்கரின் ஸூர்யோதயத்திற்கு இம்மகாந் தேஜஸ் என்று விளங்கினார். உபந்யாஸ காலத்தில் எள்ளியிருந்த அநேக ஸ்வாமிகள் திருவுள்ளத்திக்கு அமிர்தவர்ஷம் போல் வர்ஷித்து ஷை ஸ்வாமிகளால் அம்மகானுக்கு வித்வத் ஸம்பாவநாதி ப்ரணாமங்களைச் செய்து ஒன்று பல்லாயிரமாக பரிணமிக்கும் இப்புண்யாவர்த்த க்ஷேத்திரத்தில் நற்காரியங்கள் செய்தவர்கள் மஹாபாக்யத்தைப் பெற்றவர்களாவதுடன் ஆசார்யாதிஹதேவதாம் ஸமதிகாமந்யாம் நமந்யாமஹே| என்று வேதாந்த தேசிகோத்தமனால் நிர்தாரணம் செய்த ஆசார்யகடாக்ஷத்தை பெற்று மகிழ்ந்ததற்கு ஏற்று மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும் மாற்றினவர்களுக்கோர் கைம்மாறு மாயனும் காணகில்லான்.

வ. வ. க்ருஷ்ணதாஸ:

---

(4)

ஸ்ரீ அழகியசிங்கர் விழுப்புறத்தைவிட்டுப் புறப்பட்டு ஸ்ரீ மதுராந்தகத்திற்கு எழுந்தருளும் காலத்தில் மத்யே மார்க்கம் அநேக ஸ்தலங்களை அலங்கரிக்கும்படியாக நேர்ந்தது. அவைகளுள் ஒன்று திண்டிவநம் தாலூக்காவைச்சேர்ந்த கூட்டேரிப் பட்டு என்னும் க்ராமம். ஐப்பசிமீ 6வ வியாழக்கிழமைதிநம் (22—10—42) இராத்திரி 2 மணிக்கு அந்த க்ராமத்திற்கு எழுந்தருளினபொழுது, அந்தக் கூட்டேரிப் பட்டில் வஸித்துவரும் ஸ்ரீ முத்துவிஜய வெங்கடாசலபதி ரெட்டியார் என்னும் பெயருடைய ஒரு ஆஸ்திகர் ஸ்ரீ ஸ்வாமியை எதிர்கொண்டு அழைத்துப்போய் தம்மால் செய்யப்படக்கூடிய மர்யாதைகளெல்லாவற்றையும் செய்தாரென்பதை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையில் வெளியிடவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

கூட்டேரிப்பட்டு }
23—10—42 }

ஒரு ஆஸ்திகன்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஜைத்ர யாத்ரை

சென்ற புரட்டாசி மாஸத்துப் பூர்ணிமையில் ஸ்ரீ அழகிய சிங்கர் பெரும்பாக்கத்தில் தமது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை முடித்துக்கொண்டு, அங்கிருந்து யாத்ரையாகப் புறப்பட்டுத் திருக்கோவலூர் திருவஹீந்த்ரபுரம் முதலிய திவ்ய தேஶங்களுக்கு எழுந்தருளி, அங்கங்கு அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மங்களாஶாஸநம் செய்தும், அங்கங்குள்ள ஶிஷ்ய கோடிகளை அநுக்ரஹித்தும், உத்தராபிமுகமாக யாத்ரை செய்துகொண்டு, இப்பொழுது ஸ்ரீ மதுராந்தகத்தில் எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஶாஸ்த்ர பாடஶாலைக்காகக் கட்டப்பட்டுவரும் கட்டிடம் சீக்ரத்திலேயே பூர்த்தி பெற்று ப்ரவேஶார்ஹமாகிவிடுமாதலால், தாவத் பர்யந்தம் அவ்விடத்தில் எழுந்தருளியிருந்து, இந்த ஐப்பசி மாஸாந்தத்திலாவது அல்லது கார்த்திகை ஆரம்பத்திலாவது ஒரு ஶுப திநத்தில் அந்தக் கட்டிடத்திற்கு வாஸ்து ஶாந்தி முதலிய பூர்வாங்கங்களைச் செய்வித்து, நூதந க்ருஹ ப்ரவேஶ உத்ஸவத்தையும் நடப்பிக்கும்படி இருக்குமென்று நாம் நினைக்கிறோம். அதற்குப் பிறகு, ஸ்ரீ பெரும்பூதூர் மார்க்கமாகத் திருவெவ்வுளூர் எழுந்தருளுவதாக இருக்கும்.

"सोऽन्वेष्टव्यः स विजिज्ञासितव्यः"

[அவனே தேடத் தகுந்தவன்; அவனே அறியப்படத் தகுந்தவன்] என்று ஶ்ருதிகளால் கொண்டாடப்படத் தகுந்த வைபவத்தை யுடைய ஸ்ரீ ஶரண்யன், அத்யந்தம் குத்ஸிதர்களாயிருக்கும் நம்மைத் தேடி வருகிறானென்றால் அது ஒரு மஹத்தான ஸுக்ருதத்தின் பலமன்றோ? அநாதி சித்ர ப்ரவாஹமாயிருக்கும் கர்மாவித்யாதி சக்ரத்தில், எந்தக் காலத்தில் எதன்

விபாகம் எவனுக்கு நேரும் எவனுக்கு நேரமாட்டாது என்பதை யார் சொல்லக்கூடும்? ஒரு வ்ருஷலகனை (ஸம்பூகனைத்) தேடி லோகநாதனுயிருக்கும் ஸரண்யன் அயோத்யையிலிருந்து அநேக ஸத யோஜனைகளைக் கடந்து தண்டகாவநம் போகவில்லையா? த்ரிபுவநத்தையும் தனது திருவடிகளால் மறுபடியும் பரிஸுத்தம் செய்துகொண்டு ஸ்ரீ ஸரண்யன், நித்யஸூரி துல்யர்களான தனது பக்தோத்தமர்களுடன் நாம் இருக்குமிடம் தேடி நமக்கு அதிதியாக வரப்போகிறான்.

"மருந்து வந்தனை யமரருக் கருளிய மாயோன்
விருந்து வந்தன னென்றுள முருகிய விதுரன்."

என்னும் வில்லி பாரதச் செய்யுளடிகள் ஈண்டு நமது நினைவிற்கு வருகிறது.

''कोऽयं गुणः कतरकोटिगतः कियान् वा
कस्य स्तुतेः पदमहो वद कस्य भूमिः ॥''

[இது என்ன குண விசேஷம்! இதன் ஸ்வரூபம் என்ன? ஸ்வபாவம் என்ன! பரிமாணம் என்ன! இதை ஸ்துதிக்கவும் கூடுமோ?] அவனுடைய ஸந்நிதி மாத்ரமே ஸகல பாபங்களையும் நஸிப்பிக்குமென்றால், அவனை அதிதியாகப் பெற்று, அவனுக்கு ஸாக்ஷாத் ஸபர்யையைச் செய்து, அவனுடைய ஸம்ஶ்லேஷத்தை அடைவது எத்தகைய ஏற்றத்தைத்தான் கொடுக்கமாட்டாது?

भविष्यामो वयं सर्वे सत्सेव्या ब्रह्मबन्धवः ।
लोकनाथोऽतिथिर्भूत्वा यन्नस्तीर्थीकरिष्यति ॥

* * *

ஓர் மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மடம் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய இத்யாதி விஶேஷண விஶிஷ்டரான ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஶடகோப யதீந்த்ர மஹா தேஶிகனுடைய ப்ரதம வர்ஷாராதநம், நிகழும் ஐப்பசிமீ 27உ வியாழக்கிழமை திநம் ஸ்ரீ மதுராந்தகத்தில் நடைபெறுகின்றது. 18உ செவ்வாய்க்கிழமை ஸேவை முதலியவை உபக்ரமிக்கப்படும். அந்தத் திநம் முதல் 27உ பர்யந்தமான பத்துத் திநங்களிலும் பெரியதொரு உத்ஸவம் கொண்டாடப்படுமாதலால், அந்த ஸ்வாமி திருவடிகளில் ஆஶ்ரயித்த ஶிஷ்யர்களும் இன்னும் அநேக பாகவதோத்தமர்களும் அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து அந்த உத்ஸவத்தில் அந்வயித்து மஹத்தான ஆநந்தத்தை அநுபவிப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

* * *

தத்வத்தை நிர்ணயிப்பதிலோ கர்மங்களை அநுஷ்டிப்பதிலோ ஶாஸ்த்ரங்களே நமக்கு ப்ரமாணம் என்பது நமது ஸித்தாந்தம். ஶாஸ்த்ரங்கள் யாவை யென்றால், தர்ம ஶாஸ்த்ர இதிஹாஸ புராணாதிகளால் உபப்ருஹ்மிதங்களான வேதங்களே. அந்த வேதங்களை நித்யங்க ளென்றும் பகவானுடைய ஆஜ்ஞை யென்றும் நாம் ஒத்துக்கொண்டிருக்கிறோம். அவை ஒவ்வொருவருக்கும், அவரவருடைய அதிகாரத்திற்குத் தக்கவாறு, கர்மயோகம் பக்தி யோகம் இத்யாதி யோகரூபமான பகவதநந்ய பஜநத்தையே பரம தர்மமாக விதிக்கின்றன. ஆகையால், ஸத்வோத்தரர்களான மநுஷ்யர்க ளெல்லாரும், கேவலம் யுக்தி பலத்தை ஆதாரமாகக் கொண்டு குஹக புருஷர்களால் உபதேஶிக்கப்படும் மோஹந ஶாஸ்த்ராபாஸ ப்ரக்ரியைகளைப் பின் தொடராமல் வேத ஶாஸ்த்ர ஸாரபூதமான பகவதநந்ய பஜநத்தையே கைப்பற்றுகிறார்கள். இந்த அர்த்தத்தை,

ஶாஸ்த்ரத்தின் ப்ராமாண்யம்

“तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ”

[ஆகையால், எது கார்யம் எது அகார்ய மென்பதை நிர்ணயிப்பதில் ஶாஸ்த்ரமே ப்ரமாணம்] என்னும் பகவத்கீதா ஶ்லோகம் விளக்குகின்றது. ‘எது கார்யம் எது அகார்யம்’ என்று கார்யாகார்யங்களைப்பற்றி மாத்ரம் இந்த ஶ்லோகம் பேசுகிறபடியால், கர்மாநுஷ்டாந விஷய விசாரம் செய்வதில் மாத்ரம் இந்த நிபந்தநம் உண்டென்றும், தத்வ நிர்ணயத்தில் யுக்தி முதலியவைகளை ப்ரபலமான ப்ரமாணமாக எடுத்துக்கொள்ளலா மென்றும், சிலர் இதை வ்யாக்யாநிப்பார்கள். அநுஷ்டாந விபர்யயம்போல் தத்வ விபர்யயமும் ஆஸுர ஸ்வபாவமாகுமென்று இந்த ப்ரகரணத்திலேயே விவரிக்கப்பட் டிருக்கிறபடியால், இவ்விடத்தில் ப்ரயோகிக்கப்பட்டுள்ள கார்யாகார்ய ஶப்தங்கள் தத்வாதத்வங்களையும் குறிக்கின்றனவென்று நாம் க்ரஹிக்கவேண்டும். இந்தக் கருத்து, ‘கார்யாகார்ய வ்யவஸ்திதி என்பதற்கு, உபாதேயாநுபாதேயங்களின் வ்யவஸ்தை என்பது பொருள்’ என்னும் ஸ்ரீ கீதாபாஷ்ய ஸூக்தியால் விளங்கும். மேலும், ‘ஶாஸ்த்ரம் ப்ரமாணம்’ என்பதை விவரிக்கு மிடத்திலும், ‘புருஷோத்தமனாகிற பரதத்வத்தையும் அவனை அடைவதற்கு உபாயமாகிற கர்மாநுஷ்டாநத்தையும்’ என்னும் ஸூக்திகளைக் காண்கிறோம். ஆகையால், இந்த ஶ்லோகம், கர்மாநுஷ்டாந நிர்ணயம் தத்வார்த்யவஸாயம் இவை இரண்டுக்கும் ஸாதாரண மென்பது நிஶ்சயம்.

இது இவ்வாறு இருக்க: சிலர், ஶாஸ்த்ர ப்ராமாண்யத்தை அங்கீகரிக்கையில், ஶாஸ்த்ரம் சொல்வது யுக்திக்கு விருத்தமாக இருந்தால் அது அங்கீகாரத்திற்கு அர்ஹமன்றென்றும், அதை மற்றவர்களுக்கு உபதேஶித்தால் அது கேவலம் உபரோதமேயாகு மென்றும் சொல்லுகிறார்கள். இவர்கள், ‘अप्राप्ते शास्त्रमर्थवत्’

[வேறு ப்ரமாணங்களால் ஸாதிக்கப்படாமலிருக்கும் இடங்களில் மாத்ரம் ஶாஸ்த்ரம் ப்ரமாணம்] என்னும் ந்யாயத்தை மறந்தார்கள் போலும். வேறு ப்ரமாணங்களுக்கு அகோசரமாயிருக்கும் விஷயங்களில் ஶாஸ்த்ர மொன்றே ப்ரமாண மென்பது தான் நமது ஸித்தாந்தம். ஆகையால், அதீந்த்ரியமான விஷயங்களில் ஶாஸ்த்ரத்தை ப்ரமாணமன்று என்று சொல்வதற்காவது அதை ஆக்ஷேபித்து மாற்றுவதற்காவது ஒருவரும் அதிகாரியாக மாட்டார். அவ்விடங்களில் ஶாஸ்த்ரத்தை ஆக்ஷேபிக்கிறது என்று ஆரம்பித்தால், பாபத்தில் அபிநிவேஶம் செய்பவர்களுக்கும் ஶாஸ்த்ரம் பரதந்த்ரமாகிவிடும்; அப்பொழுது தர்ம ஸேது குலைந்து போய்விடு மன்றோ? இதனை,

"शास्त्रन्नश्शासनीयं यदि भवति तदा संप्लुतो धर्मसेतुः"

என்று ஸ்ரீதேஶிகன் அநுக்ரஹித்திருக்கிறார்.

ஆனால், 'ஶாஸ்த்ரம் சில விடங்களில் தெளிவாகப் பேசவில்லையே; அதில் முரண்பாடுகளும் காணப்படுகின்றனவே; அப்படி இருக்குமவை எவ்விதத்தில் ப்ரமாணங்களாக அங்கீகரிக்கப் படக்கூடும்?' என்று கேட்கலாம். தர்மமானது துர்ஜ்ஞேயம்; மஹர்ஷிகள் கூட வருந்திப் பத விந்யாஸம் செய்யவேண்டும்படியான நிலம். ஆனால், அப்படிப்பட்ட தெளியாத நிலங்களை ஶ்ருதி ஸ்ம்ருதி ஶரணரான நமது பூர்வாசார்யர்கள் கண்டக ஶோதநம் செய்து தெரிவித்திருக்கிறார்கள். அவர்களால் காண்பிக்கப் பட்டிருக்கும் வழியில் நடந்தால், நமக்கு வருவதொரு தீங்குமில்லை.

"महाजनो येन गतस्स पन्थाः"

இவ்விதம் அளவற்ற நன்மையைச் செய்யக்கூடிய இந்த ஶாஸ்த்ரம் இப்பொழுது அதிமாத்ரம் பரிதாபப்படத்தக்க துர்த்தஶையை அடைந்து நிற்கின்றது. இதில் நம்பிக்கையே யற்றவர்கள் பலர்; நம்புவார்போல் நடிப்பவர் பலர். உண்மையாக நம்புமவர்க்குள்ளும் பலர் தமக்கு இஷ்டமாக இருக்கும் பாகத்தை மாத்ரம் ஆதரித்து மற்றை அம்ஶங்களை அநாதரிக்கிறார்கள். பூர்வாசார்யர்களால் காட்டப்பட்டுள்ள மார்க்கத்தையே த்யஜித்துத் தமது சிற்றறிவுக்குத் தோன்றுவதுபோலத் தர்க்காபாஸ பலத்தால் விபரீதார்த்தம் பண்ணிக்கொண்டு, அதற்கு ஒத்த அநுஷ்டாநத்தைக் கைப்பற்றுபவர் மற்றும் பலர். இவ்வாறு ஜநங்களுட் பெரும்பாலார் விலகவே, ஶாஸ்த்ரத்தை உண்மையாக ஆதரித்து, அதிற் சொல்லியிருக்கும் ப்ரகாரம் அநுஷ்டிப்பவர்கள் மிகவும் ம்ருக்யரே. இந்தத் துர்த்தஶையை நிவர்த்திக்க வேண்டு மென்னும் அபிஸந்தியுடன் சில மஹான்கள் பலவித முயற்சியைச் செய்து வருகிறார்கள். ஸ்ரீஶரண்யன் அந்த முயற்சிகளைக் குளிரக் கடாக்ஷித்து, அவையெல்லாம் ஸபலமாகும்படி அநுக்ரஹிக்கவேண்டு மென்பது நம்முடைய ஹார்த்தமான ப்ரார்த்தனை.

श्रीः
श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

॥ केनोपनिषत् ॥

हरिः ओम्

केनेषितं पतति प्रेषितं मनः
केन प्राणः प्रथमः प्रैति युक्तः ।
केनेषितां वाचमिमां वदन्ति
चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति ॥ १ ॥

श्रीः
श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

இந்த உபநிஷத், ஸாமவேதத்திலுள்ள 'தலவகார உபநிஷத்' என்று சொல்லப்படும் உபநிஷத்தைச் சேர்ந்தது. இதில் முக்யமாகப் பரமாத்ம ஸ்வரூபம் விளக்கப்படுகின்றது. இந்த்ரியங்கள் முதலிய அசேதந வஸ்துக்க ளெல்லாவற்றையும் அவ்வவற்றின் விஷயங்களில் ப்ரேரிப்பித்து, அவைகளில் ப்ரவர்த்திக்கும்படியாகச் செய்கிறவன் பரமாத்மா; ஜீவகோடியைச் சேர்ந்த சேதநவர்க்கம் முழுவதையும் அதனதன் கார்யத்தில் ப்ரவர்த்திப்பிக்கிறவனும், ஆஸ்ரிதர்களிடம் ப்ரஸந்நனாகி வித்யா நிஷ்பத்திக்கு அநுகூலமான வீர்யத்தைக் கொடுத்து அதன் வழியாக அந்த ஜீவன்களுக்கு அம்ருதத்வத்தை ப்ராபிக்கிறவனும் அவனே. அவன், இவ்விடத்தில் தென்படும் வஸ்துக்களைக் காட்டிலும் அத்யந்தம் விலக்ஷணன். அவன் அபரிச்சிந்நமான ஸ்வரூபம் முதலியவைகளை உடையவனானபடியால், அவனை உள்ளபடி முழுவதிலும் அறிவது என்பது ஸாத்யமில்லை; ஸ்வல்பம் ஸ்வல்பமே அறியலாம். இவை முதலிய அம்ஸங்கள் இந்த உபநிஷத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஸிஷ்யன் ப்ரஸ்நம் செய்வது போலவும் அதற்கு ஒரு குரு ப்ரதிவசநம் அளிப்பது போலவும் அந்த விவரணம் செய்யப்பட்டிருக்கின்றது. "**केन प्रेषितं**" [எவனால் ஏவப்பட்டு] என்று ஒவ்வொரு ப்ரஸ்நத்திலும் 'கேந' 'கேந' [எவனால் எவனால்] என்று ஆரம்பம் தென்படுகின்றபடியால், இதற்குக் 'கேநோபநிஷத்' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

1. [ப - ரை.] **मनः** - மநஸ்ஸானது, **केन** - எவனால், **प्रेषितं [सत्]** - ஏவப்பட்டதாய்க் கொண்டு, **इषितम्** - இச்சிக்கப்படும் விஷயத்தில் [அதாவது: தனக்கு அநுரூபமான விஷயத்தில்], **पतति** - ப்ரவர்த்திக்கின்றது? **प्रथमः प्राणः** - முக்யமான ப்ராணனானது, **केन** - எவனால், **युक्तः** - ஏவப்பட்டதாய்க் கொண்டு, **प्रैति** - ஸஞ்சரிக்கின்றது? [**लोकाः** -

श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्-
वाचो ह वाचं स उ प्राणस्य प्राणः ।
चक्षुषश्चक्षुरतिमुच्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ २ ॥

ஜநங்கள்], **केन**-எவனால், **इषिताम्** - ஏவப்பட்ட, **इमाम्**-இந்த, **वाचम्** - வாக் இந்த்ரியத்தைக் கொண்டு, **वदन्ति** - வ்யவஹரிக்கிறார்கள்? **चक्षुः** - கண்ணை யும், **श्रोत्रम्** - காதையும், **क उ देवः**-எந்தத் தேவன், **युनक्ति** - ஏவுகின்றான்?

'மநஸ் முதலியவை எல்லாம் அசேதந வஸ்துக்களாகையால், ஒரு சேதநனால் ஏவப்படாமல் இவை ஒரு கார்யத்திலும் ஸ்வயமாக ப்ர வர்த்திக்கமாட்டா' என்னும் ஶங்கை ஜநிக்க, ஒரு ஶிஷ்யன் தனது குருவை அடைந்து இந்த ப்ரஶ்நத்தைச் செய்கிறான்.

---

2. இது முதல், குருவின் ப்ரதிவசநம்.

[ப-ரை.] **यत्** - எது, **श्रोत्रस्य** - காதுக்கும், **श्रोत्रम्** - காதோ, **मनसः** - மநஸ்ஸுக்கும், **मनः** - மநஸ்ஸோ, **वाचः** - வாக்குக்கும், **वाचम्** - வாக்கோ, **प्राणस्य** - ப்ராணனுக்கும், **प्राणः** - ப்ராணனோ, **चक्षुषः** - கண்ணுக்கும், **चक्षुः** - கண்ணோ, **स उ** - அவனே [அவைகளெல்லாவற்றையும் நியமிக்கிறவன்]. **धीराः** - புத்திஶாலிகள், **अतिमुच्य** - [இவ்வாறாக] அறிந்து, **अस्मात्** - இந்த, **लोकात्** - லோகத்திலிருந்து, **प्रेत्य** - புறப்பட்டுப் போன பிறகு, **अमृताः** - முக்தர்களாக, **भवन्ति** - ஆகிறார்கள்.

'காதுக்குக் காது' என்றிம்மாதிரி யெல்லாம் சொல்வதன் கருத்து என்ன வென்றால்: 'காதுக்குக் கேட்கும் ஶக்தியை எவன் கொடுத்தானோ, எவன் அம்மாதிரி ஒரு காதை அபேக்ஷியாமலே ஸ்வய மாகவே கேட்கும் ஶக்தியை உடைத்தாயிருக்கிறானோ' என்பதுதான். இப்படியே மற்றவைகளுக்கும் பொருள் கொள்ளவேண்டும். 'இந்த்ரியங் களுடைய ப்ரகாஶமெல்லாம் இவனுடைய அதீநம்; இவன் ப்ரகாசமோ அந்த இந்த்ரியங்கள் அதீநமன்று' என்பது தாத்பர்யம். 'எவனை நாம் இந்தக் கண்களால் நன்றாகப் பார்க்க முடியாதோ' என்பதை இந்த வாக்யம் குறிக்கின்றதென்றும் சொல்லலாம்.

वाचम् - இது இரண்டாம் வேற்றுமை ரூபம்; ஆனால் இவ்விடத் தில் '**वाक्**' என்ற முதல் வேற்றுமையின் அர்த்தத்தைக் குறிக்கின்றது.

धीराः-இதற்குத் 'தைர்யஶாலிகள்' என்பது ப்ரஸித்தமான பொரு ளாக இருந்த போதிலும், இவ்விடத்தில் 'எவருக்கு '**धी**' [நல்ல புத்தி] இருக்கின்றதோ அவர்கள்' என்று அர்த்தம் கொள்வதே ஸங்கதமாகும்.

अस्माल्लोकात् प्रेत्य - 'இந்த லோகத்தைவிட்டுப் புறப்பட்டு' என்று சொல்லுகிறபடியால், 'மோக்ஷம் என்பது இந்த லோகத்தில் இல்லை; அதைப் பெறவேண்டியவர்கள் வேறொரு லோகத்திற்குப் போகிறார்கள்' என்பது ஸித்திக்கின்றது. வேறு உபநிஷத்துக்களிற் சொல்லப்பட்

न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति नो मनः ।
न विद्मो न विजानीमो यथैतदनुशिष्यात् ॥ ३ ॥

अन्यदेव तद्विदितादथो अविदितादधि ।
इति शुश्रुम पूर्वेषां ये नस्तद्व्याचचक्षिरे ॥ ४ ॥

यद्वाचाऽनभ्युदितं येन वागभ्युद्यते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ५ ॥

டுள்ள அர்ச்சிராதி மார்க்கத்தின் வழியாகப் போவது இவ்விடத்தில் ஸூசிப்பிக்கப்படுகின்றது என்று க்ரஹிக்கக்கூடும்.

---

3. கீழே சொல்லப்பட்டிருக்கும் விஷயமே மறுபடியும் விவரிக் கப்படுகின்றது.

[ப - ரை] **चक्षुः** - கண், **तत्र** - அவ்விடத்தில், **न गच्छति** - போக மாட்டாது. **वाक्** - வாகிந்த்ரியமும், **न गच्छति** - போகமாட்டாது. **मनः**- மநஸ்ஸும், **नो गच्छति** - போகமாட்டாது. [அப்படி ஒரு இந்த்ரியமும் அதை எட்டாவிட்டால், அதை எவ்விதம் உபதேசிக்கலாமென்றால்], **न विद्मः**—[அந்தரிந்த்ரியத்தால்] அறியோம், **न जानीमः**—[பஹிரிந்த்ரியத் தாலும்] அறியோம் என்று, **यथा** - எப்படி [சொல்லலாமோ, அப்படி], **एतत्** - இதை, **अनुशिष्यात्** - உபதேசிக்கவேண்டும்.

இப்படி பரப்ரஹ்மமானது நம்முடைய ஜ்ஞாநத்திற்கே அவிஷய மாக இருக்கின்றது என்று சொல்வது அஸங்கதமாகையால், '**न विद्मो न च जानीमः**' என்பதற்குப் 'பூர்ணமாக அறியோம்' என்று தாத்பர்யம் கொள்ளவேண்டும். ஓர் அளவுக்கும் உட்படாது இருப்பதைப் பூர்ண மாக அறிவது என்பது ஸாத்யமில்லையன்றோ?

---

4. மறுபடியும் அந்தத் தாத்பர்யத்தையே இது விளக்குகின்றது.

[ப - ரை] **ये** - எந்தப் பூர்வாசார்யர்கள், **नः**- எங்களுக்கு, **तत्** - அதை, **व्याचचक्षिरे** - உபதேசித்தார்களோ, [**तेषां**] **पूर्वेषाम्** - அந்தப் பூர்வாசார்யர்களிடமிருந்து, **इति** - இவ்வாறாக, **शुश्रुम** - கேட்டிருக்கிறோம். [எவ்வாறென்றால்], **तत्** - அந்த ப்ரஹ்மமானது, **विदितात्** - நன்றாக அறி யப்பட்டுள்ள பொருள்களைக் காட்டிலும், **अन्यदेव** - விலக்ஷணமே; **अथो**-தவிர, **अविदितात्**-அறியப்படாமலுள்ள பொருள்களைக் காட்டிலும், **अधि** - அதிகமே [அதாவது: விலக்ஷணமே]. [இவ்வாறுதான்.]

---

5. கீழே குறிக்கப்பட்ட வைலக்ஷண்யமானது இதுமுதல் ஐந்து வாக்யங்களால் ப்ரபஞ்சிக்கப்படுகின்றது.

[ப - ரை] **यत्** - எதானது, **वाचा** - வாக்கினால், **अनभ्युदितम्** - ப்ரகாசிக்கப்படக்கூடாததோ, **येन** - எதனால், **वाक्** - வாகிந்த்ரியமானது,

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ६ ॥

यच्चक्षुषा न पश्यति येन चक्षूंषि पश्यति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ७ ॥

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदं श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ८ ॥

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ९ ॥

इति प्रथमः खण्डः ॥

अभ्युद्यते - ப்ரகாசிக்கப்படுகின்றதோ, **तदेव** - அதையே, **त्वम्** - நீ, **ब्रह्म** - ப்ரஹ்மமென்று, **विद्धि** - அறிந்துகொள். **यत्** - எதை, [**जनाः**- ஜநங்கள்,] **इदम्** [**इति**]- இது என்று [இது வென்று சுட்டிக் காண்பிக்கும்படி நன்றாக அறியப்பட்டதுபோல], **उपासते** - உபாஸிக்கிறார்களோ, [**तत्** - அதானது], **इदन्न** - இதுவன்று [ப்ரஹ்மமன்று].

அதாவது: ப்ரஹ்மமானது நம்முடைய இந்த்ரியங்களுக்குக் கோசரமாக இருக்கும் வஸ்துக்கள் போலன்று; அவைகளைக் காட்டிலும் விலக்ஷணம் என்பது தாத்பர்யம்.

6. [ப—ரை] **यत्** - எது, **मनसा** - மநஸ்ஸால், **न मनुते** - நினைக்கப்படவில்லையோ, **येन** - எதனால், **मनः**- மநஸ்ஸானது, **मतम्** - நினைக்கின்றது என்று, **आहुः**- சொல்லுகிறார்களோ. மற்றவை முன்போல.

7. [ப—ரை] **यत्** - எது, **चक्षुषा** - கண்ணால், **न पश्यति** – பார்க்கப்படவில்லையோ, **येन** - எதனால், **चक्षूंषि** - கண்கள், **पश्यति** - பார்க்கின்றனவோ. மற்றவை முன்போல. [**पश्यति** என்பதை **पश्यन्ति** எனக் கொள்க.]

8. [ப—ரை] **यत्** - எது, **श्रोत्रेण** - காதால், **न शृणोति** - கேட்கப்படவில்லையோ, **येन** - எதனால், **इदम्** - இந்த, **श्रोत्रम्** - காதானது, **श्रुतम्** - கேட்கின்றதோ. மற்றவை முன்போல.

9. **यत्** - எது, **प्राणेन** - ப்ராணனால், **न प्राणिति** - ஜீவிக்கப்படவில்லையோ, **येन** - எதனால், **प्राणः**- ப்ராணனானது, **प्रणीयते** - ஜீவிக்கப்படுகின்றதோ. மற்றவை முன்போல.

இந்த வாக்யங்களிலுள்ள **मनुते**, **पश्यति** முதலிய வினைகளுக்கு இம்மாதிரி பொருள் கொள்வதே, கீழே **वाचा अनभ्युदितम्** என்று சொல்லப்பட்டிருப்பதற்கு ஒத்ததாகும்.

முதல் கண்டம் முற்றிற்று.

श्रीः

द्वितीयः खण्डः

हरिः ओम्॥

यदि मन्यसे सुवेदेति दभ्रमेवाऽपि नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपम्।
यदस्य त्वं यदस्य देवेष्वथ नु मीमांस्यमेव ते मन्ये विदितम्॥ १॥

नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च॥ २॥

முதல் கண்டத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயமாவது :—'ப்ரஹ்மம் என்பது இந்த ப்ரபஞ்சத்தில் நமது இந்த்ரியங்களுக்குக் கோசரமாயிருக்கும் வஸ்துக்களைக் காட்டிலும் அதிமாத்ரம் விலக்ஷணம், அநந்தம், அளவற்ற குணங்களுடன் கூடியது, வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாதது, ஆகையால் அதை இப்படிப்பட்டது என்று சொல்ல முடியாது' என்பதுதான். அப்படியானால், ப்ரஹ்மத்தை அறிந்தவன் மோக்ஷத்தை அடைகிறானென்றும், ப்ரஹ்மத்தை அறிந்தே ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறானென்றும் சொல்லும் ஶ்ருதிகளெல்லாம் அஸங்கதங்களாகி விடுமே என்னும் ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். அதற்கு ஸமாதாநத்தைச் சொல்லுகின்றது இரண்டாவது கண்டம். அந்த ஸமாதாநமாவது—'ப்ரஹ்மமானது மிகப் பெரியது ; ஒரு ப்ரகாரத்திலும் அதை அளவிட முடியாது ; ஆகையால் அதைப் பூர்ணமாக அறிவது என்பது ஸாத்யமாகாத கார்யம் ; மிக ஶ்ரமப்பட்டு நாம் அதை அறிய முயன்றாலும், அதன் அத்யல்பமான ஒரு பாகத்தை மாத்ரமே நாம் அறியலாம்' என்பதுதான்.

1. [ப - ரை] **सुवेद** - 'நான் [ப்ரஹ்மத்தை] நன்றாக அறிந்துவிட்டேன்', **इति** - என்று, **मन्यसे यदि** - எண்ணினாயேயானால், [**तत् न तथा**- அது அப்படியன்று], **इह** - இந்த லோகத்தில், **अस्य ब्रह्मणः** - இந்த ப்ரஹ்மத்தினுடைய, **यद् रूपम्** - எந்த ரூபத்தை, **त्वम्** - நீ, **वेत्थ** - அறிந்திருக்கிறாயோ, **तत्** - அது, **नूनम्** - நிஶ்சயமாக, **दभ्रमेव** - அல்பமே. **देवेषु** - தேவர்களுக்குள், **यत्** - எதை [எந்த ரூபத்தை], **त्वम्** - நீ, [**वेत्थ** - அறிகிறாயோ, **तदपि** - அதுவும், **दभ्रमेव** - அல்பமே] **अथैव** - இதற்குப் பிறகே, **ते** - உனக்கு, **मीमांस्यं नु** - [அது] விசாரிக்கத் தகுந்ததாக இருக்கிறது. [அதாவது : இதற்கு முன் நீ நன்றாக விசாரிக்கவில்லை]. இவ்வாறு குரு சொன்னதைக் கேட்டு ஶிஷ்யன் சொல்லுகிறான். **विदितम्** - அறியப்பட்டதாக, **मन्ये** - எண்ணுகிறேன். [அதாவது : 'இப்பொழுது நீங்கள் சொன்னதன் கருத்தை அறிந்துகொண்டேன்'].

---

2. ஶிஷ்யன், 'நான் அறிந்துகொண்டேன்' என்று தன்னாற் சொல்லப்பட்டதை விளக்குகிறான். இதுவும் ஶிஷ்யனுடைய

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ॥ ३ ॥

வார்த்தை; எப்படி அறிந்துகொண்டான் என்பதைச் சொல்லுகிறான்.

[ப-ரை] **अहम्** - நான், **सुवेद** - நன்றாக அறிந்துகொண்டு விட்டேன், **इति** - என்று, **नो मन्ये** - எண்ணவில்லை; **न वेद** - அறிந்து கொள்ளவில்லை, **इति च** - என்றும், **नो मन्ये**- எண்ணவில்லை ; [**अपि तु** - பின் என்னவென்றால்], **वेद** [**एव**] - அறிந்தே இருக்கிறேன். [முழுவதும் அறியப்படவில்லை என்பது இல்லை: ஸ்வல்பம் அறியப்பட்டதுமுண்டு என்பது கருத்து]. **नः** - எங்களுக்குள் [அதாவது : உம்முடைய ஶிஷ்யர்களாகிற எங்களுக்குள்], **यः** - எவன், "**न वेद इति नो** - அறிய வில்லை என்பதில்லை, **वेद इति च नो** - அறிந்தேன் என்பதுமில்லை' [என்று நிர்த்தேசிக்கப்பட்டுள்ள], **तत्** - அதை [அந்த அர்த்த தத்வத்தை], **वेद** - அறிகிறானோ [அம்மாதிரி அறிகிறானோ], **सः** - அவனே, **तद् वेद** - அதை அறிந்தவனாகிறான்.

தாத்பர்யம் இதுதான் :-' ப்ரஹ்மம் பரிச்சேதிக்கத் தகுந்த வஸ்து அன்று. ஆகையால், அதை நான் அறிந்தேன் என்று சொல்வதற்கு மில்லை, அறியவில்லை என்று சொல்வதற்கு மில்லை. அது அப்படிப்பட்ட வஸ்து என்று எவன் அறிகிறானோ அவனே அதை அறிந்தவனாவான்' என்பதே.

---

3. கீழே சொல்லப்பட்டுள்ள அர்த்தமே வேறு ப்ரகாரமாகச் சொல்லப்படுகின்றது.

[ப-ரை] **यस्य** - எவனுக்கு, [**तत्** - அந்த ப்ரஹ்மமானது], **अमतम्** - [அளவுக்கு உட்பட்டதாக] எண்ணப்படவில்லையோ, **तस्य** - அவனுக்கு, **मतम्** - [அது சரியாக] எண்ணப்பட்டதாகிறது. **यस्य मतम्** - எவன் அதை அளவுக்கு உட்பட்டதாக நினைக்கிறானோ, **सः** - அவன், **न वेद** - அதை அறியவே இல்லை. **विजानताम्** - [ப்ரஹ்மம் இவ்வளவு உள்ளது என்னும்] அறிவை யுடையவர்களுக்கு, **अविज्ञातम्** - [அது] அறியப்படாததே; **अविजानताम्** - அம்மாதிரி அறிவை உடைத் தாயிராமல் இருப்பவர்களுக்கு, **विज्ञातम्** - அது அறியப்பட்டதாகிறது.

இவ்விடத்தில் ப்ரயோகிக்கப்பட்டுள்ள '**अमतम्**', '**अविज्ञातम्**' - என்னும் பதங்கள், 'முழுவதும் அறியப்படாதது' என்னும் அர்த்தத்தைக் குறிக்கின்றனவே யன்றி, 'அறிவுக்கே ஒரு ப்ரகாரத் திலும் எட்டாதது' என்பதைச் சொல்லவில்லை என்றே நாம் பொருள் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் '**मतम्**' '**विज्ञातम्**' - என்னும் பதங்கள ஸங்கதங்க ளாகமாட்டா. நிற்க, ப்ரஹ்மம் ஸாக்ஷாத்தயாக அறி யப்படாத பொருளாக இருக்கும் பக்ஷத்தில், அப்பொழுது 'ப்ரஹ்

प्रतिबोधविदितममृतममृतत्वं हि विन्दते।
आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दतेऽमृतम् ॥ ४ ॥

மத்தை அறிய ப்ரயத்நப்படவேண்டும்' என்று விதிக்கும் ஶ்ருதி வாக்யங்களெல்லாம் வீணாகிவிடும்.

---

4. கீழே சொல்லப்பட்டதற்குக் காரணத்தைச் சொல்லுகிறது இந்த வாக்யம். சிற்சில அஸாதாரண தர்மங்களுடன் கூடியதாக ப்ரஹ்மத்தை உபாஸிக்கிறவர்களுக்கே அந்த ப்ரஹ்மம் தனது ஸாதர்ம்யத்தைக் கொடுக்கின்றது என்றன்றோ வேதாந்த வாக்யங்கள் சொல்லுகின்றன? ப்ரஹ்மம் ஸர்வாத்மநா அறிவதற்கு அஶக்யமானால், அவனை உபாஸிப்பதே ஸாத்யமற்றதாகிவிடும்; தனது ஸாதர்ம்யத்தைக் கொடுப்பது என்பதும் அர்த்தமற்றதாகிவிடும். பகவாந் அம்மாதிரி தன்னை உபாஸிப்பவர்களுக்கே தனது ஸாதர்ம்யத்தைக் கொடுக்கிறான் என்று எவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "**यथा क्रतुरस्मिन् लोके भवति, तथेतः प्रेत्य भवति**"- [பகவானை உபாஸிக்கும் பொழுது எந்த எந்தக் குணங்களுடன் கூடினவனென்று த்யாநித்து உபாஸிக்கிறானோ, பல தசையிலும் அந்தந்தக் குணங்களுடன் கூடினவனாகவே அவனை அநுபவிக்கிறான்] என்னும் வாக்யங்களைப் பார்த்தால் அது விளங்கும். இதை வேதாந்திகள் 'தத் க்ரது ந்யாயம்' என்பார்கள். எந்தக் குணங்களோடு உபாஸிக்கிறானோ அந்தக் குணங்களோடு மாத்ரம் அவனை அநுபவிக்கிறான் என்பது இதன் கருத்தன்று; உபாஸிக்கப்பட்ட குணங்களுள் ஒன்றும் பலதசையில் அநுபவிக்கப்படாமல் போகாது என்பதே அதன் கருத்து. மற்றைக் குணங்களின் அநுபவமும் அவனுக்கு உண்டு. இப்படியே ஆசார்யர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள்.

[ப - ரை] **प्रतिबोधविदितम्** - பகவானுக்கே அஸாதாரணமாயுள்ள தர்மங்களுடன் கூடினதாக உபாஸிக்கப்படும், **अमृतम् हि**-ப்ரஹ்மஸ்வரூபமன்றோ, **अमृतत्वम्**-அம்ருதமாகிற தனது ஸ்வரூபத்தையே, **विन्दते**-[உபாஸிக்கிறவனை] அடைவிப்பிக்கின்றது? **आत्मना**-பரமாத்மாவிடமிருந்தே, **वीर्यम्**-[ப்ரஹ்ம வித்யையின் தேர்ச்சிக்கு வேண்டுவதான] வீர்யத்தை, **विन्दते**-[உபாஸகன்] அடைகிறான். **विद्यया**-[பரமாத்மாவினால் கொடுக்கப்பட்ட வீர்யத்தால் தேர்ச்சிபெற்றுள்ள] ப்ரஹ்ம வித்யையால், **अमृतम्** - [பகவானுடைய ஸாயுஜ்யமாகிற] மோக்ஷத்தை, **विन्दते** - அடைகிறான்.

प्रतिबोधविदितम् - **प्रतिनियतो बोधः प्रतिबोधः** - [அஸாதாரணமான ஜ்ஞாநம்] ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் அநந்தத்வம் முதலிய தர்மங்களுடன் கூடினவன் என்னும் ஜ்ஞாநம். அந்த ஜ்ஞாநத்தால் **विदितम्** - உபாஸிக்கப்பட்ட. **'अमृतम्'** - என்பதற்கு 'மரணமற்றது' என்பது பொருள். எவ்வித விகாரமுமற்றிருக்கும் பகவத் ஸ்வரூபம் இவ்விடத்

इह चेदवेदीदथ सत्यमस्ति न चेदिहावेदीन्महती विनष्टिः।
भूतेषु भूतेषु विचित्य धीराः प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ ५॥

इति द्वितीयः खण्डः॥

தில் அதனுல் குறிக்கப்படுகின்றது. 'विन्दते'-என்பதற்கு 'அடைகின்ருன்' என்பதே பொருள். இவ்விடத்தில் 'அடைவிக்கிருன்' என்னும் அர்த்தத்தில் அது ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.

आत्मना विन्दते वीर्यम् - பரமாத்மாவின் க்ருபையினுலேயே நமக்கு ஸகலவித புருஷார்த்தங்களும் கிடைக்கின்றனவன்ருே?

---

5. அப்படிப்பட்ட ப்ரஹ்ம ஜ்ஞாநத்தில் ஒருவித ஆஸக்த்யதிஶயத்தை ஶிஷ்யனுக்கு ஜநிப்பிக்க வேணுமென்று க்ருபையுடன் குரு அந்த ப்ரஹ்ம ஜ்ஞாநத்தின் பெருமையைப் புகழ்கின்ருர்.

[ப - ரை]. इह [एव] - இந்த ஜந்மத்திலேயே, अवेदीचेत्-[ப்ரஹ்மத்தை] அறிந்துகொண்டால், अथ - அப்பொழுதுதான், सत्यमस्ति - இருக்கிறவனுக ஆகிருன். इह न अवेदीचेत् - இந்த ஜந்மத்தில் அந்த அறிவற்றவனுக இருக்கும் பக்ஷத்தில், महती विनष्टिः - அது பெரியதொரு நாஶமே. [அதாவது : இருப்பற்றவனுகவே ஆகிருன்]. भूतेषु भूतेषु - எல்லாப் பூதங்களிடத்திலும், विचित्य - தேடி, [அதாவது: ஸர்வ பூதங்களிடத்திலும் இருக்கும் பரமாத்மாவை 'அந்தப் பரமாத்மா மற்றெல்லாவற்றையும் காட்டிலும் விலக்ஷணன்' என்று நிர்ணயித்து], धीराः - புத்திமான்கள், अस्मात् - இந்த, लोकात् - லோகத்திலிருந்து, प्रेत्य - மரணமடைந்த பிறகு [அதாவது : கடைசி ஜந்ம மொழிந்த பிறகு], अमृताः - முக்தர்களாக, भवन्ति - ஆகிருர்கள்.

सत्यमस्ति - ஒருவன் இருப்பதும் இல்லாததும், அவன் ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை உடைத்தாயிருப்பதையும் அப்படி இராமல் இருப்பதையும் சார்ந்திருக்கின்றன. ப்ரஹ்ம ஜ்ஞாநமுள்ளவனேயே இருப்புடன் கூடியவனுக ["असन्नेव स भवति असद् ब्रह्मेति वेद चेत्। अस्ति ब्रह्मेति चेद्वेद सन्तमेनं ततो विदुः" என்று] உபநிஷத்துக்கள் பேசுகின்றன.

अस्माल्लोकात् प्रेत्य - 'இந்த லோகத்திலிருந்து புறப்பட்டுப் போய்' என்பது கவனிக்கத் தக்கது. முதல் கண்டத்தின் முடிவிலும் இந்த வாக்யம் தென்படுகின்றது. மோக்ஷத்திற்குப் போகிறவர்கள் இந்த ஸ்தலத்தை விட்டு மற்ருெரு ஸ்தலத்திற்குப் போகிருர்கள் என்பது இதனுல் வ்யக்தம். அர்ச்சிராதி மார்க்கமென்று சொல்லப்படும் மார்க்கமே இவ்விடத்தில் விவக்ஷிதம்.

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

21/10/07

No. M. 4437

ஸ்ரீ:

புத்தக விளம்பரம்

ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ர

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸம்ஸ்க்ரு
தேவநாகர லிபியில் வெகு நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அச்சிடப்
அவர் அருளிச்செய்த 32 ரஹஸ்யங்களும் தேசிக ப்ரபந்தங்க
லிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. மொத்தம் 9 ஸம்புடங்கள் விலை

தனித்தனி ஸம்புடங்களின் விலை விவரம்

1. **ஸ்தோத்ராவளீ விபாகம்.**—ஹயக்ரீவ ஸ்தோத்ரம் முதல் ஸஹஸ்ரம் வரை ஸகல ஸ்தோத்ரங்களும் ... ரூ. 2-
2. **வேதாந்த விபாகம்—1.** அதிகரண ஸாராவளியும் சத தூஷணியும் ... ரூ. 3—0—0
3. ௸ 2. மீமாம்ஸாபாதுகா, ஸேஶ்வரமீமாம்ஸா, ந்யாய பரிசுத்தி, ந்யாய ஸித்தாஞ்ஜநம் ரூ. 3—0—0
4. ௸ 3. ஸர்வார்த்த ஸித்தியோடு கூடின தத்வ முக்தாகலாபம், ... ரூ. 4—0—0
5. **காவ்ய நாடக விபாகம்.**—ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷிதநீவி, யாதவாப்யுதயம், ஸங்கல்ப ஸூர்யோதயம் ... .. ரூ. 3—0—0
6. **வ்யாக்யாந விபாகம் 1.**—ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம், சதுஶ்லோகி பாஷ்யம், ஸ்தோத்ர பாஷ்யம், கத்ய பாஷ்யம் ... ரூ. 2—0—0
7. ௸ 2. கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷா, கீதா பாஷ்யமும் தாத்பர்ய சந்த்ரிகையும் ... ரூ. 5—0—0
8. ௸ 3. தத்வடீகை, நிக்ஷேபரக்ஷை, ஸச்சரித்ரரக்ஷை, பாஞ்சராத்ரரக்ஷை முதலியவை ... ரூ. 4—0—0
9. **தேசிக ப்ரபந்த ரஹஸ்யங்கள்** (தெலுங்கு லிபி) ... ரூ. 5—0—0

ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ரந்த மாலா.—உடையவர் அருளிச்செய்த ஸ்ரீ பாஷ்யம் கீதா பாஷ்யம் முதலிய ஸகல க்ரந்தங்களும் ஒரே ஸம்புடமாக (தெலுங்கு லிபி) ... ... ரூ. 6—0—0

ஸ்ரீமத்வரவரமுநீந்த்ர க்ரந்தமாலா.—மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீ வசநபூஷண, தத்வத்ரய, முமுக்ஷுப்படி, ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யாநங்களெல்லாம் ஒரே ஸம்புடமாகத் தெலுங்கு லிபி ரூ. 6—0—0

ஸ்தோத்ர மாலா. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வழங்கும் ஸகல ஸ்தோத்ரங்களும். (நாகர லிபி) ... ... ரூ. 1—8—0

ஸ்ரீ வைஷ்ணவஸுதா—ஸம்ஸ்க்ருத பாஷையிலும் ஹிந்தீ பாஷையிலும் மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை. வருஷச் சந்தா ... ரூ. 2—0—0

: கிடைக்குமிடம் :

P. B. அண்ணங்கராசாரியர்,

க்ரந்தமாலா ஆபீஸ் : : காஞ்சீபுரம்

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.

ஸ்ரீ :

...லுத்தினவர்களின் பெயர்

—10—'42 to 31—10—'42

...க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டு ...ரோம்.]

		Rs.
	...wamy Iyengar, ...aswaran Koil Street.	... 3
	...chari, Pleader, Wandi-	.. 3
	...rinivasa Iyengar, 27 Hanu- ...ntharayan Koil Street, Tripli- ...ane	... 1
4.	,, Appa Srinivasa Iyengar, Kalyanapuram, B.O. Trivadi. (via) Tanjore	... 3
5.	,, J. Srinivasachariar, Teacher, Model High School, Teachers' College, Saidapet	... 1
6.	,, S. Ganesh, 72 Mahim Mansion, Mahim, Bombay	... 3
7.	Sri C. Rajagopalachariar, 28 Boag Road, T. Nagar	...
8.	,, A. Narayana Iyengar, B.A., B.L., High Court Vakil, Thillaisthanam.	
9.	,, Ramaswami Reddiar, Village Munsiff, Chikathampur Post. Musiri Taluk, (via) Thoriyur, Trichy Dt.	
10.	,, Champakammal, 238, third Mai... Road, Chamarajpet, Bangalore	..
11.	,, Kidambi K. Gopalaswami Iyengar, Rtd. Headmaster, Therazandur, Tanjore Dt.	..
12.	,, A. Srinivasaraghavachariar, Post Office, Tiruppapuliyur	...

[இந்த ஸஞ்சிகையுடன் பதினேரு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. இதுவரையில் சந்தாவைச் செலுத்ாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்படவில்லை.]

ஸ்ரீ :

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1. இந்தப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் இந்த ஆபீஸ் விலாஸத்திற்கு எழுதிப் பத்ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வருஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினல், அந்த மாறுதலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. சந்தாதாரர்கள் ஆபீஸுக்கு எழுதும் கடிதங்கள் எல்லாவற்றிலும், தங்கள் பெயருடன் தங்கள் ரிஜிஸ்தர் நம்பரையும் எழுத ப்ரார்த்திக்கிறோம். அந்த நம்பர் அச்சிட்ட விலாஸத்தில் காணப்படும்.

Regd. No. M. ***4437***

ஸ்ரீ:

<u>புத்தக விளம்பரம்</u>

ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்த மாலா

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸம்ஸ்க்ருத க்ரந்தங்கள் யாவும் தேவநாகர லிபியில் வெகு நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவர் அருளிச்செய்த 32 ரஹஸ்யங்களும் தேசிக ப்ரபந்தங்களும் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. மொத்தம் 9 ஸம்புடங்கள் விலை ரூ. 30—0—0

தனித்தனி ஸம்புடங்களின் விலை விவரம்

1. **ஸ்தோத்ராவளீ விபாகம்.**—ஹயக்ரீவ ஸ்தோத்ரம் முதல் பாதுகா ஸஹஸ்ரம் வரை ஸகல ஸ்தோத்ரங்களும் ... ரூ. 2—0—0
2. **வேதாந்த விபாகம்—1.** அதிகரண ஸாராவளியும் சத தூஷணியும் ... ரூ. 3—0—0
3. ஷை 2. மீமாம்ஸாபாதுகா, ஸேச்வரமீமாம்ஸா, ந்யாய பரிசுத்தி, ந்யாய ஸித்தாஞ்ஜநம் ரூ. 3—0—0
4. ஷை 3. ஸர்வார்த்த ஸித்தியோடு கூடின தத்வ முக்தாகலாபம், ... ரூ. 4—0—0
5. **காவ்ய நாடக விபாகம்.**—ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷிதநீவி, யாதவாப்யுதயம், ஸங்கல்ப ஸூர்யோதயம் ... .. ரூ. 3—0—0
6. **வ்யாக்யாந விபாகம் 1.**—ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம், சதுஸ்லோகீ பாஷ்யம், ஸ்தோத்ர பாஷ்யம், கத்ய பாஷ்யம் ... ரூ. 2—0—0
7. ஷை 2. கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷா, கீதா பாஷ்யமும் தாத்பர்ய சந்த்ரிகையும் ... ரூ. 5—0—0
8. ஷை 3. தத்வடீகை, நிக்ஷேபரக்ஷை, ஸச்சரித்ர ரக்ஷை, பாஞ்சராத்ர ரக்ஷை முதலியவை ... ரூ. 4—0—0
9. **தேசிக ப்ரபந்த ரஹஸ்யங்கள்** (தெலுங்கு லிபி) ... ரூ. 5—0—0

ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ரந்த மாலா.—உடையவர் அருளிச்செய்த ஸ்ரீ பாஷ்யம் கீதா பாஷ்யம் முதலிய ஸகல க்ரந்தங்களும் ஒரே ஸம்புடமாக (தெலுங்கு லிபி) ... ... ரூ. 6—0—0

ஸ்ரீமத்வரவரமுநீந்த்ர க்ரந்தமாலா.—மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீ வசநபூஷண, தத்வத்ரய, முமுக்ஷுப்படி, ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யாநங்களெல்லாம் ஒரே ஸம்புடமாகத் தெலுங்கு லிபி ரூ. 6—0—0

ஸ்தோத்ர மாலா ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வழங்கும் ஸகல ஸ்தோத்ரங்களும். (நாகர லிபி) ... .. ரூ. 1—8—0

ஸ்ரீ வைஷ்ணவஸுதா—ஸம்ஸ்க்ருத பாஷையிலும் ஹிந்தீ பாஷையிலும் மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை. வருஷச் சந்தா ... ரூ. 2—0—0

: கிடைக்குமிடம் :

P. B. அண்ணங்கராசாரியர்,

க்ரந்தமாலா ஆபீஸ் : : காஞ்சீபுரம்

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—10—'42 to 31—10—'42

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

		Rs.
1.	Sri S. Krishnaswamy Iyengar, Advocate, Easwaran Koil Street. Karur ...	3
2.	,, V. Seshachari, Pleader, Wandiwash ..	3
3.	,, V. Srinivasa Iyengar, 27 Hanumantharayan Koil Street, Triplicane ...	1
4.	,, Appa Srinivasa Iyengar, Kalyanapuram, B.O. Trivadi. (via) Tanjore ...	3
5.	,, J. Srinivasachariar, Teacher, Model High School, Teachers' College, Saidapet ...	1
6.	,, S. Ganesh, 72 Mahim Mansion, Mahim, Bombay ...	3
7.	Sri C. Rajagopalachariar, 28 Boag Road, T. Nagar ...	1
8.	,, A. Narayana Iyengar, B.A., B.L., High Court Vakil, Thillaisthanam.	3
9.	,, Ramaswami Reddiar, Village Munsiff, Chikathampur Post. Musiri Taluk, (via) Thoriyur, Trichy Dt. ...	3
10.	,, Champakammal, 238, third Main Road, Chamarajpet, Bangalore ...	3
11.	,, Kidambi K. Gopalaswami Iyengar, Rtd. Headmaster, Therazandur, Tanjore Dt. ...	3
12.	,, A. Srinivasaraghavachariar, Post Office, Tiruppapuliyur ...	3

[இந்த ஸஞ்சிகையுடன் பதினொரு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. இதுவரையில் சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்படவில்லை.]

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1. இந்தப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் இந்த ஆபீஸ் விலாஸத்திற்கு எழுதி[illegible] பத்ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வருஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினால், அந்த மாறுதலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. சந்தாதாரர்கள் ஆபீஸுக்கு எழுதும் கடிதங்கள் எல்லாவற்றிலும், தங்கள் பெயருடன் தங்கள் ரிஜிஸ்தர் நம்பரையும் எழுத ப்ரார்த்திக்கிறோம். அந்த நம்பர் அச்சிட்ட விலாஸத்தில் காணப்படும்.